381

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கச] யுவ—பங்குனி [பரல்-௯

திருவாசகம்

கோயிற்றிருப்பதிகம்

அநுபோக இலக்கணம்

உணர்ந்த மாமுனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா வுயிர்கட்கும் உயிரே
யெனைப் பிறப்பறுக்கு மெம்மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாமில்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

பதவுரை :—

உணர்ந்த மாமுனிவர்—நின்னொடு அத்துவிதமாய்க் கலந்து நின்று நின்னைச் சிறப்புவகையால் உணர்ந்து பொதுவகையால் மாத்திரம் அறிந்த பெரிய முனிவர்கள்

உம்பரொடு—தேவர்கள் ஆகிய இவர்களொடு

ஒழிந்தார்—பொதுவகையால் நின்னை அறிந்த ஏனைய மக்களும் தேவர்களும்

உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே—நின்னைத் தங்கள் பொது இயல் அறிவால் அறிதற்கு அறியமுடியாத மெய்ப்பொருளே

இணங்கிலி—(எல்லா உயிர்களும் நின்னை அடைந்து பேரின்பம் நுகரல் வேண்டும், என்ற நின் கருத்தை அறிந்து) அக்கருத்துக்கு இணங்கி யொழுகாதிருக்கிற

எல்லா உயிர்கட்கும் உயிரே—(எல்லா உயிர்களுக்கும் அவற்றின் மேல் வைத்த பேரன்பால் அவை நின்னை அடைதற்குத் தகுதி பெறும் வண்ணம்) அவற்ரோடு இரண்டறக் கலந்து நின்று இடையருது அறிவித்தும் அறிந்தும் வருகின்ற பேரன்புப் பொருளே

திணிந்தது ஓரிருளில் தெளிந்த தூவெளியே—அவ்வாறு நின்னோ டிணங்காத உயிர்களை நெருங்கி மறைத்துநின்று நின்னை அறிய வொட்டாமற் செய்கிற ஒப்பற்ற ஆணவமல இருளோடு நீயும் தாக்கின்றி அருட்பேரொளியாய்க் கலந்து நிற்றல்பற்றி அவ் வுயிர்களிடத்திலுள்ள நெருங்கிய இருள் சிறிது சிறிதாகக் குறைந்து குறைந்து முடிவில் அவ்விருள் முழுவதும் நீங்கி அதனுல் அவ்வுயிர்களில், தெளிவாய் விளங்கும் பேரொளிப் பொருளே

எனைப்பிறப்பு அறுக்கும் எம்மருந்தே—(இவ்வாறு நீ உயிர்களுக்கு எப்பொழுதுஞ் சலியாது செய்கிற முறைமைப்படி) என் மேலும் நீ பேரன்பு வைத்து (திருப்பெருந்துறைக்கு வந்து என்னை ஆண்டு அடிமை கொண்டு) மலத்தாலாகிய எனது பிறவிப்பிணி முற்றிலும் நீங்குதற்கு மருந்துபோ லிருந்தவனே

திருப்பெருந் துறையுறை சிவனே—திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமானே

குணங்கள் தாம் இல்லா இன்பமே—தாமதம், இராசதம், சாத்துவிகம் என்னும் மாயா குணங்களின் தொடர்பு சிறிதுமின்றி அருட் குணங்களோடு விளங்கும் பேரின்பப் பொருளே

நின்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே—இவ்வாறு நீ என்னை ஆண்டருளியதனுல் பேரின்ப நிலையடைந்த எனக்கு நான் கேட்டு நீ தரும்படி என்ன குறை இருக்கின்றது? (ஒரு குறையுமில்லை என்றபடி)

விளக்கவுரை :—

உணர்ந்தமா முனிவர் உம்பரொடு ஒழிந்தார் உணர்வுக்கு தெரிவரும் பொருளே—உணர்ந்தமா முனிவர் என்பதில் உணர்வு என்பது, இங்கே "உரையற் றுணர்வற்று உயிர்பரம் அற்று உணரும்" மோன நிலையிலுள்ள மெய்யுணர்வு அன்று (திருமந்திரம் 1593) நூல்களைக் கற்றுக் கேட்டு ஆராய்ந்து அறியும் உணர்வு. இந்த உணர்வு இறைவனோடு கலந்து நின்றுணராது அவன் பொது இயல்பை அவனின் வேருய் நின்று அறியும் சுட்டுணர்வு, ஆத

வின் 'உணர்ந்த மாமுனிவ ரும்பரோ டொழிந்தார் உணர்வுக் குந் தெரிவரும் பொருளே' என்றார். அடிகள் அற்புதப் பத்து எட்டாவது பாட்டில் "ஓசையுணர்வார்க் குணர்வரிய வன்" என்று இதே கருத்தைக் கூறியருளினர். திருமூலர் 430-வது திருமந்திரத்தில் இந்த உணர்வை 'ஆயுணர்வு' என்றும், திருமாளிகைத் தேவர் தமது கோயில், திருவிசைப்பா முதலாவது பாட்டில் 'சூழ்உணர்வு' என்றும், இறைவன் இந்த சூழ் உணர்வைக் கடந்து நின்றதோர் உணர்வு என்றும் கூறி யிருத்தல் காண்க—முனிவர், உம்பர் என்று மக்கள் தேவர்கள் கூறப்பட்டதனால் ஒழிந்தாரென்பதற்கு ஏனைய மக்களும் தேவ ரும் என்று உரை கூறப்பட்டது.

இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே—இணங்கு + இலி = இணங் கிலி; இறைவனது கருத்துக்கு இணக்கமில்லாது ஒழுகுகிற உயிர் கள். தங்கள் கட்டுநிலையில், இறைவன் தங்கள் பொருட்டுச் செய்யும் அருட்செயலை அறியாதிருத்தல் காரணமாக அவன் செயலுக்கு நேரொத்து ஒழுகாதிருக்கின்றமை பற்றி அவ்வுயிர் களை இணங்கிலிகள் என்று அடிகள் கூறினர். இறைவன் எல்லா வுயிர்களுக்கும் பிராணனாய் நின்று அவற்றை இயக்கியும் அறிவித்தும் செய்து வருதலால் அவனை அடிகள் எல்லா வுயிர் கட்கும் உயிரே என்றார்.

திணிந்தது ஓர் இருளில் தெளிந்த தூவெளியே--திணிந்த = செருங்கிய; தூவெளி = ஞானகாசம்; சிதம்பரம். உயிர்களுக்குக் கட்டு நிலை யில் தன்னையடையும் பக்குவம் வருவிக்கும் பொருட்டு இறைவ னது அருட்சத்தியானது திரோதான சத்தியாய் நின்று உலக போகம் நுகர்வித்தும் பாகம் வந்த அளவில் அருட்சத்தியாக மாறி நின்றும் இவ்வாறு உயிர்களுக்கு முழுப்பக்குவம் வந்து மலம் நீங்கியபின் முழுவதும் அருட்சத்தியாக மாறி, தூவெளியில் பேரொளியாக விளங்குதலின் அடிகள் இறைவனைத் "திணிந்த தோரிருளிற் றெளிந்ததூ வெளியே" என்றார்.

எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்து—எனை = எனது; உருபு மயக்கம். உடற்பிணிக்கு மருந்துபோல உயிர்ப்பிணியாகிய தமது பிற வியைத் திருப்பெருந் துறைக்கு வந்து ஆண்டருள் செய்து நீங்கி னன் என்பார், 'எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்தே' என்றார். தம்மைப் போன்ற எல்லா உயிர்களுடைய பிறவிப் பிணிக்கும் இறைவன் மருந்தாகலின் அடிகள் 'எம்மருந்தே' என்று பன்மை யால் விளித்தார்.

குணங்கள்தாம் இல்லா இன்பமே—குணங்கள் என்பது இங்கே மாயையொடு தொடர்புடைய சாத்துவிகம் முதலிய மூன்று குணங்களையும் குறிக்கிறது. இறைவன் தன்வயத்தனுதல் முதலிய எட்டு அருட்குணங்களையும் உடையவன். உயிர்களுக்கு இறைவனை அடையும் பேரின்பம் அவன் அருட்குணங்களோட்

டும் உயிரினிடத்து முற்றிலும் பதிதலால் உண்டாகின்றது. இந்தப் பேரா இயற்கைப் பேரின்பமானது சத்துவகுணம் உயிரின்மாட்டு விளங்குதலால் உண்டாகும் நிலையில்லாத உலக இன்பம்போல அன்று என்பார் 'குணங்கள் தாமில்லா இன்பமே' என்றார். தாம் = அசை.

நின்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே—குறைவில்லா நிறைவுடைய இறைவனை, அடிகள் தாம் அவனைச் சேராதிருக்குங்கால் உடையதாயிருந்த குறைகளை அறிந்து, சேர்ந்த பின் எல்லாக் குறைகளும் நீங்கிப் பேரின்பம் பெற்றேன் என்பார், 'நின்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே' என்றார்—இதனால் உலகில் வாழும் மக்கள் எல்லாரும் குறையுடையவர்கள் என்பதும், அக்குறைகளை அவர்கள் அறிந்து இறைவனைச் சேர்ந்து அவன்கண் அடங்கி நின்றாலன்றித் தீரா என்பதும் கூறப்பட்டன. 'குறைந்தடைந் தாராழாமை காக்குமடி' என்று திருநாவுக்கரசு அடிகளும் (220-2) "குறையுடையார்க் கல்லால் களைகிலார் குற்றமே" என்று திருஞானசம்பந்த அடிகளும் (294-4) கூறியிருத்தல் காண்க.

'குறுகினேன்' என்றதனால் அடிகள் தமது தன் முனைப்பு முற்றிலும் நீங்கி இறைவன் திருவடி அடைந்தார், என்பது குறிப்பாலுணர்த்தப்பட்டது. இந்தப்பாட்டில் 'திணிந்ததோரிருளிற் தெளிந்த தூவெளியே' என்றதனால் அருளொளி காரணமாக உண்டாகும் மலநீக்கத்தால் விளங்கும் அறிவு விளக்கமும் 'எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்தே' என்றதனால் அவ்வறிவு விளக்கம் பற்றி உண்டாகும் அன்பு விளக்கமும் 'குணங்கடாமில்லா இன்பமே' என்றதனால் அவ்வன்பு விளக்கம்பற்றி உண்டாகும் செயல் குறிக்கும் இன்ப விளக்கமும் கூறப்பட்டன. நிறை அறிவு, நிறை அன்பு, நிறை செயல் மூன்றுமே பேரின்பத்துக்குக் காரணமாயுள்ளன என்பது 'இன்றெனக்கருளி' என்ற முதற் குறிப்புப் பாட்டிற் கூறப்பட்டதுபோல் இந்தப் பாட்டிலும் கூறப்பட்டது.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

TRANSLATION

Thou art not fully comprehended even by the contemplative sages, the gods or any order of beings,
Thou art the spirit which pervadeth all spirits;
Thou art the sure remedy against repeated births;
Thou art the pure light which shinest in the midst of expanded darkness,
O, Siven of Tiruperundurei!
Thou art unqualified happiness; what more can they require who are united to Thee!

—*F. W. ELLIS*

தமிழும் ஹிந்தியும்

[தூத்துக்குடி திரு யா. ஞா. அழகனர்.]

நாட்டுத் தொண்டர்களில் பலர் ஹிந்தி மொழியை இந்திய நாடு எங்கணும் நாட்டிவிடல் வேண்டுமென்று வேலை செய்கின்றனர். ஹிந்தி மொழியைத் தமிழர்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளலாமா? அதனல் விளையும் பலாபலன்கள் என்ன? இன்னனபற்றி ஆய்வதே இதன் ஒரு புடைநோக்கம்.

இந்திய நாடெல்லாம் நிலவக்கூடிய பொதுமொழி யொன்றை நாட்டுவதெனின் அதை மொழிவல்லார் எல்லாருங் கூடி நாட்டிவிடக் கூடுமா? ஆயின், எம்மொழி பொது மொழி ஆதற்குச் சிறந்தது என்பனவற்றை நுனித்தாராய்ந்து செய்தல்வேண்டும். ஐந்திணை நிலங்கள் விரவப்பெற்று அவ்வவ் நிலங்களுக்கேற்ப குணச் சிறப்பும் கொள்கை வேறுபாடும் நாப்பழக்கங்களும் அமைந்ததோர் பரந்த கண்டமெனக் காணும் நந்தம் நாட்டிடை ஓர் பொதுமொழியை நிறுவ நினைப்பது எளிதாகாது.

ஹிந்தி மொழியைப் பொதுமொழி ஆக்கற்கு அனைத்து மக்களது கருத்தும் ஒன்றுபட்டுளதா எனின் அன்றென்றே அறைதல்வேண்டும். சின்னாண் முன்னர் சாண்டர்ஸ் என்பார் 'உருது மொழியே இந்தியாவின் பொதுமொழி ஆதற்பாலது' என்ருர். அந்தந்த மாகாணத்து வழக்கு மன்றங்களில் அந்தந்த மாகாணத்துத் தாய்மொழியே நிலவல்வேண்டும். ஆங்கிலத்தையே பொதுமொழி ஆகக் கொள்ளல்வேண்டும் என்ருர் மற்ருெரு பெரியார். தாய் மொழியின் மூலமாகவே கல்வி அனைத்தையும் கற்றல்வேண்டும் என்பர் கவி ரவீந்திர நாத் போன்ற ஆசிரிய அறிஞர்கள். இகலற இயம்பின், ஆங்கிலமே பொதுமொழி ஆதற்குத் தடையென்ன? கற்ருேராலும் அரசியலாராலும் தற்போது பொது மொழியாகக் கொள்ளப் படுவது அதுவே அன்ருே? நம் நாடு இற்றைப்போது மேனாடுகளில் புகழ்பெற்றுளது எனினும், நாம் அரசியலில் முன்னேற்றம் அடைந்துளோம் எனினும் அதற்குக் காரணம் ஆங்கில மொழியே என்று உண்மை கூறல்வேண்டும். தவிர நம் நாட்டுப் பல்வேறு தாய்மொழிகள் ஈண்டும் ஏனைய நாடுகளிலும் சிறப்பாக எண்ணப்படுகின்றன என்ருல் அதற்கு ஒருபுடை காரணம் ஆங்கில மொழியும் ஆங்கில மக்களுமே எனின் நமக்கு ஏற்படும் குறை யாதோ அறிகிலேன்.

தாய்மொழிப் பயிற்சி எனின் அஃது இயற்கைக்குப் பொருந்தியது. வேற்று மொழிப்பயிற்சி எனின் அது

இயற்கையோடு மாறுபட்டது. மேலை நாடுகள் இற்றை நாள் செயற்கை வாழ்க்கையில் இறங்கி முன்னேறுவதைக் கண்டு, கீழ்நாடுகள் பல அவற்றைப் பின்பற்றுகின்றன. 150 ஆண்டுகளாக ஆங்கில ஆட்சி நிலவினும், 150 ஆண்டுகளாக ஆங்கில மொழி பொதுமொழியாக வழங்கினும், இந்திய நாடு முழுவதும் மேனாட்டார் வாழ்க்கை முறையைப் பின் பற்றிற்றோ? ஏன்? இந்திய நாட்டில்தான் இயற்கை இன்னமும் உரங் கொண்டு வாழ்கின்றது. இத்தகைய நாட்டில் வாழுமொருவனைத் தாய்மொழிப் பயிற்சியாகிய இயற்கை வாழ்க்கையினின்று வேற்று மொழிப் பயிற்சியாகிய செயற்கை வாழ்க்கைக்குத் திருப்ப முடியுமா? ஆங்கில மொழி அறிவோடுமட்டும் பிரயாணம் செய்வோர் சிலர் வங்காளத்தில் பிரயாணம் செய்வது எளிதில்லை என்பர். ஏனெனில் வங்காளிகள் ஆங்கிலம் அறிந்தாராயினும் தாய்மொழியிலேயே உரையாடுகின்றனராம். உண்மைதான். செயற்கையில் ஒருவாறு ஒருமொழியைப் பேச அறிந்தும் இயற்கைக்குப் படிந்து உரையாடுவதே யார்க்கும் எளிதன்றோ! இன்பமுமன்றோ! செயற்கை மொழிப்பயிற்சியில் இறங்குவதென்றாலும் தமிழர்கள் ஆங்கிலத்தில் ஒருவேளை இறங்கிவிடலாம். ஹிந்தியில் இறங்குவதென்றால் அரிதினும் அரிதே. ஏனெனில் தமிழ் மொழியாளர் ஒரே ஓசையெழுத்துப்பயிற்சியோடு மூச்சுச்செட்டும் சொற்செட்டும் பொருந்தியதோர் இனியமொழியைப் பேசும் பழக்கத்தினர்.

ஹிந்தி மொழியை நிறுவமுயல்வோர் அதனால் இந்திய மக்களிடையில் ஓர் கட்டுணர்ச்சியும் திண்ண நிலையும் ஏற்படலாம் என்பர். அவ்வித நிலையைத் தடுத்து நிற்பது நாட்டில் நிலவும் பல்வேறு மொழிகள் அல்ல என்பதை அவர்கள் ஓர்தல் வேண்டும். நந்தம் பல்வேறாய வர்ணக் கட்டுகளும் ஒழுக்க வேறுபாடுகளும் பழக்க வழக்கங்களும் நாட்டில் நிலவுங் கால மளவும் மக்களிடையில் ஓர் கட்டுணர்ச்சியைக் காண்பது கனவிலும் கூடாததோர் காரியமே ஆகும். தமிழ் நாட்டின் கண்ணுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழ் மொழியே பேசுகின்றனர். மொழிஉரிமையில் ஒன்று பட்டிருந்தும் வாழ்க்கை முறையில் ஒத்த உரிமையை அவர்கள் அடைந்துளரோ? இந்நிலையையே தமிழ் நாடன்றி ஏனைய நம் நாடுகளிலும் காணலாம். எனவே, ஒற்றுமையை உண்டாக்கற்பாலது வாய்ப்பேச்சு அன்று, உள்ளத்தின் தன்மையே என்பது கண்கூடு.

தவிர, நம்மக்களிடை மதப்பற்றும் மொழிப்பற்றும் ஒன்றையொன்று விரவி விளங்குதலைக் காணலாம். மகம்மதி

யர் கொரானைப்படிக்க வேண்டுமானால் உருதுப்பயிற்சி உடையராதல் வேண்டும். பெரியபுராணம் தேவாரம் முதலிய நூல்களும் அந்நூல்களைக் கற்கும் தமிழ் ஆர்வமும் இந்து சைவர்களுக்கு இன்றியமையாததே. மதத்தோடு பொருந்திய மொழிப்பற்றே மதத்தை வளர்ப்பதற்கும் மொழியைப் பேணுதற்கும் கருவியாய் அமைந்துளது. ஒரே கடவுள் வழி பாட்டில் படியாமல் பல்வேறு கடவுள் வழிபாடுகளில் படிந்து, மதப்பற்றும் மதத்தை வளர்க்கும் மொழிப்பற்றும் வாய்ந்த இந்திய நாட்டு மக்களை யெல்லாம் மதத்தோடு கலவாத ஹிந்தி மொழி எவ்வாறு ஒரு முகப்படுத்த வல்லதோ? நாட்டில் நிலவும் பல்வேறு மதங்களையும் அறிவீனத்தையும் ஒழித்தாலன்றி ஈண்டு நிலவும் மொழிகளை ஒழிக்கவும் இயலாது, ஹிந்தி செழிக்கவும் இயலாது என்பது ஒருதலை.

ஹிந்தி பொதுமொழியாயின், ஏனையமொழிகளைப் போலவே தமிழும் தன்மணத்தையும் குணத்தையும் வலிமையையும் இழக்கும் என்பதில் ஐயமில்லை. நம்தமிழ்மொழி அந்நாண் முதல் பல்வேறு மொழிகளின் சேர்க்கையினால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுளது. ஆரியர்கள் இந்நாட்டில் குடியேறித் தங்கள் செல்வாக்கைத் தமிழர்மீது செலுத்தா நிற்கையில், அந்தோ! நம்தமிழ்மொழி பல்வேறு வடமொழிகளை விரவப்பெற்றது. நாலைந்து மொழிகளை ஈன்றும் நாளும் மாறாக் கன்னித்தன்மை வாய்ந்த நம்மொழி ஆரியக்கலப்பின் காரணத்தால் வடமொழியினின்றும் வந்ததோ என்று பலரும் ஐயுறற்கு இடனாய்த் தன் சிறப்பிழக்கப் பார்த்தது. பிற்றை நாளில் மகம்மதியர்களின் கூட்டுறவினால் ஹிந்துஸ்தானி பாரசீகம் முதலிய மொழிகளின் சேர்க்கையுற்று, கிராமமுனிசிபு, தாசில்தார் முதலிய அரசியல் அலுவலார் நந்தமிழரசில் இல்லையோ என்னும் ஐயத்தைக் கிளப்பிவிட்டது. நாயக்கர் அரசர்காலத்தில் தெலுங்குமொழி தமிழுலகில் அரசியல் மொழியாக நிலவிற்றென்பர். தெலுங்குமொழி தமிழ்த்தாயின் செல்வக் குழந்தைகளிலொன்றாகலின் அக்குழந்தையால் தாயானவள் ஒருவாறு கெடாது வாழ்ந்தனள் எனலாம். இக்காலத்தில் ஆங்கிலமொழி அரசியல் மொழியாக நிலவ, நந்தமிழ்மொழியும் தமிழ்மக்களும் மொழியளவில் அடைந்த அவநிலைமை மொழிதற்கு வெட்கமானதே. ஆங்கிலங் கற்றார்க்கு நாட்டு மொழிப்பற்று ஒருவாறு அற்றது. அவர்களது உரையாடலும் உணர்ச்சியும் வேறுவழிக்குத் திரும்பின. அன்னவர்க்கும் அறிவிலார்க்கும் இடையில் கூட்டுறவு என்பது கடவுள்வந்து கூட்டினாலும் அமையாது போலும்! தமிழ் எழுத்தறியாதாரும் பேச்சுவழக்கில் ஆங்கிலமும் தமி

ழும் கலந்து உரையாடுகின்றனர். பின்னை ஆங்கிலம் கற்றவர்களைக் கேட்பானேன்.

இவ்வாறு கற்றோரது கல்வியானது கல்லாத நாட்டுமக்களுக்குப்பயன்படாது கழிதலின் நாடானது கல்வியில் முன்னேற்றங் கண்டபாடில்லை. இந்திய நாடுகள் எல்லாம் கல்வியிலும் ஒற்றுமையிலும் முன்னேற்றம் காணவேண்டுமானால் அவ்வந்நாடுகள் தத்தம் தாய்மொழிகளின் மூலமாகவே முன்னேற்றத்தைக் காணல் கூடும். இது ஏனைய நாடுகளில் கண்கூடாகக்கண்ட காரியம். இப்பரந்த கண்டத்தில் இந்நலங்களை வளர்க்கவேண்டுமானால் மொழிப்படர்ச்சியைப் பின்பற்றி மொழிவாரியாக நாடுகளைப் பிரித்து அந்தந்த மொழிவழக்கினருக்குள் அந்தந்த தாய்மொழிகளின் மூலமாகவே தொண்டாற்றுதல் வேண்டும். இவ்வாறு இந்நலங்களை அடைந்த பின்னரே ஒருங்கிணைக்கப்பட்டதோர் கூட்டு வாழ்க்கைக்கு மக்களை எளிதில் வழிநடத்தலாம். தாய்மொழியின் மணமறிந்த மக்கள் நம்நாட்டிடை நூற்றிற்கு $6\frac{1}{2}$ பேர்கள்தான் உண்டு. ஹிந்தி ஒருமொழியாகி இற்றை நாளில் நன்மை செய்யக்கூடுமானால் ஏறிய அளவில் இந்த $6\frac{1}{2}$ பேர்களுக்கு மட்டுமே நன்மை செய்தல் கூடுமென்றோ, ஹிந்திபரவுவதற்கு உழைக்கின்றவர்கள் தாய்மொழியும் பிறமொழியும் அறிந்த மக்களிடமே உழைக்கின்றனர்! அவர்கள் தாய்மொழி அறிவும் இல்லாது தயங்கும் நாட்டுமக்களுக்கு ஹிந்திமொழியைக்கற்பிக்க முனைந்துளரோ? அது அவர்களால் எங்ஙனம் கூடும்! நாவிலிருக்கும் தாய்மொழி அறிவே சாலாத மக்களுக்கு நாவுக்கடாத ஹிந்திமொழியைப்புகட்டுவது இயலாது என்பதை அவர்களும் அறிந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. ஆதலின் நாட்டுக் கல்வியின் ஏழ்மை நிலையை உன்னி, மக்களை எம்மொழியின் மூலமாய்ச் செலவின்றியும் வீண்காலக் கழிவின்றியும் நாவுக்கு இடர் இன்றியும் உள்ளத்துச் சோர்வுக்கு இடனின்றியும் கல்விபயிற்றல் கூடுமோ அம்மொழியின் மூலமாகவே பயிற்றல் நன்று. அம்மொழி தாய்மொழியே என்பது அறிஞர் அனைவருக்கும் உடன்பாடு என்பது உறுதியாம்.

இப்படியிருக்க ஹிந்திமொழியைப் பொதுமொழியாக்க நினைப்பதன் காரணம் யாதோ? பரந்த வடநாட்டினர் ஒடுங்கிக் கிடக்கும் தென்னாட்டின் கண் தங்கள் செல்வாக்கைத் திணிக்க வேண்டுமென்று நினைப்பதாலோ? இது தொடங்கியநாள் தொட்டு வடநாட்டில் வேலை யில்லாது திண்டாடிய சிலர் தென்னாட்டின் கண் நல்லூதியம் பெறுகின்றனர். ஹிந்தி நூல்கள் வெளியிடும் கடைகளும் போதிய பணவரவைப்

பெறுகின்றன. மாணவர்களில் பலர் ஹிந்திமொழியைக் கற்கப் புகுந்து தமிழ்த்தேர்ச்சி பெறுவதிலும் திண்டாடு கின்றனர். நாளடைவில் ஹிந்திமொழியாசிரியர்கள் தாய் மொழியாசிரியர்களை விட உயர்வாகவே கருதப்படுவதும் எதிர்கொள்ளக் கிடக்கின்றது. ஆங்கிலம் கற்றவர்க்கே வேலை யில்லாத் திண்டாட்டமாயின் ஹிந்தியைக் கற்போருக்கும் அதே திண்டாட்டந்தானே? தவிர பிற மொழிகளை முதன்மை யாகக் கொள்வது கொண்டவர்மீது அடிமைத்தனத்தைச் சுமத்தியதே எனலும் இழுக்காகாது.

இதன் மற்றோர் காரணம் ஆரியர் சூழ்ச்சியோ என்றும் கொள்ளக் கிடந்தது. ஹிந்திமொழி பெரிதும் வட மொழிக்கலப்பும் வடிவமும் பொருந்தியது. அத்தகையதோர் மொழியைப் பழகுவது ஆரியக் கலப்புடையவர்களுக்கு எளி தாயும் சிறப்பாயும் அமைந்துளது. தவிர இறந்துபட்ட வட மொழி ஹிந்திமொழியால் உயிருடன் இயங்கமுயல்கின்றது என உள்ளத்தை ஆறுதல் செய்து கொள்ளவும் இடனுயுள்ளது. தற் போதைய இந்தியாவில் இறந்துபட்டதோர் மொழியை உடை யராய் நாட்டுமொழிப்பற்றின்றி வாழும் ஒரு குழுவினரே ஆங்கிலத்தைப் பற்றிக்கற்றதுபோல, ஹிந்தியையும் கற்கத் தொடங்கியிருப்பதிலிருந்து அவர்களாலாயே ஹிந்தி மொழிப் படர்ச்சி வளர்கின்றது எனலாம். ஆதலின் இக் கொள்கையை நாட்டினவர்கள் அவர்களேயோ என்று ஐயுற வேண்டி இருக் கின்றது. இதற்கு வடநாட்டினரோ பார்ப்பனரோ எவர் கார ணமாயிருந்தாலும், அத் தொண்டர்கள் தம் கருத்தை மற்றவர் மீது வற்புறுத்தி வருகின்றனர். ஜில்லாபோர்டு முதலிய பொது நிலையங்களின் பணங்களைக்கொண்டு ஹிந்தியைக் கற்பிக்க வேண்டுமென்று ஆணைகளை அமுலுக்குக் கொண்டுவருகின்ற னர். இடம் விட்டுப் பெயர இயலா எளிமை வாய்ந்த இந் நாட்டு மக்களுக்கு எள்ளளவும் பயன்படாத ஹிந்தி மொழி யைக் கற்பிப்பதற்குத் தம் சொந்தப்பணத்தை விடுத்துப் பொதுப்பணங்களை வாரி இறைப்பது நேரியது ஆகாது. தாய் மொழிப் பயிற்சியைத் தள்ளி ஹிந்தி மொழியை வற்புறுத்தும் பழக்கம் நாட்டிடை இப்பொழுதே தலைகாட்டத் தொடங்கி இருப்பது மிகவும் வருந்தத்தக்கதோர் செயலாகும். ஆதலின் கற்றவர்களிடை ஹிந்தி பரவுதலில் முயற்சி எடுக்கும் தொண் டர்கள் அதைவிடுத்துக் கல்லாத மக்களிடை அவரவர்கள் தம் தாய்மொழி அறிவை அடைய முயற்சி செய்வார்களாயின், நாடு விரைவில் புத்தறிவுற்றுத் தன் நெடுங்கால நிந்தையை நீக்கிக்கொள்ளும் என்பதை அனைவரும் அறிவார்களாக.

இலக்கணமும் இலக்கியமும் :

LANGUAGE AND LITERATURE

பாயிரப் பொருள் தொகையும் விரிவும்

[பேஸ்கி என்னும் வீரமாமுனிவர்]

*பதிகத்துட் பொருட்டொகைப்பட வுரைக்குமாறு
ணர்த்துதும். பதிகத்துள் தொகைப்படப் பொருளை யுரைத்
துக் காட்டுந் தன்மையாற் கேட்பதற் கிணக்கமு மாசையு
மற்றையவரிடத் துண்டாகவும், தன் பொருடெளிவொடு
தோன்றவும், பதிகவுரிமை வழுவாதொழுகவு முரைப்பது
முறையெனக்கொள்க. இவற்றுட் கேட்போரிடத்தி லிணக்க
மாதற் கவையடக்கமாகும். கேட்பதற் காசையாவதற்
கெடுத்தபொருளின் மாட்சியு மருமையும் பயனுங் காட்டுவ
தாகும். தெளிவுண்டாவதற் கேற்ற பொருளொன்றாகச்
சுருங்கச் சொல்லிப் பின்னதனுறுப்பென வதனை யிரண்டு
மூன்று பிரிவாகப் பிரிப்பவு மூன்று பிரிவுமிக்கது சிறப்பு
மன்று. மீண்டப் பிரிவிலொன்றாயினு முன்றொகையாகச்
சொன்ன பொருளிலடங்கா பிரிதாய் நிற்றலும் வழுவே. அங்
ஙனம், இந்நாட்டரசன் கைக்கிணையில்லை யென்பது தொகையா
யுரைத்த புகழின்றோற்றப் பொருளாம். இனிப் பிரிவாக
வவன்கை பொன்மழை வழங்க வின்மையொழிதலும் விண்
மழை வழங்க வெம்பகை யொழிதலு மாமென்பது தொகைப்
பொருளிரண்டாய்ப் பிரித்தவாறு. இவ்வாறன்றி யவனே
சொன்மழை வழங்க வறியாமையொழியு மென்றாலிது முத்
தொகையா யுரைப்பவெடுத்த பொருளிலடங்காமையால் வழு
வெனக் கொள்க. பிறவுமன்ன.

அன்றியும், பதிகத்துரிமை வேண்டும். இஃது பொருட்
குரிமையும் அளவிற்குரிமையும் என விருவகைப்படும். இவற்
றுட் பொருட்குரிமையாவது, தான் விரித்துரைக்க வெடுத்த
பொருட்கன்றியே மற்றொரு பொருட்கேலாதாம்படி சிறப்
பினையுடைய பதிகங்கூற லதன் பொருட்குரிமை யெனப்படும்.
இதனைப்பற்றி முன்னோர் பதிகமே நான்முகமென்றார்.

---

*இஃது இவ்வாசிரியர் எழுதிய 'தொன்னூல் விளக்கம்' என்ற
நூலிற் கண்டது. இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி
யில் இயற்றப்பட்டு 1838-ல் முதன்முதல் அச்சிடப்பட்டது.

என்னை யோவெனில் அணியுடை முதலிய பலர்க்குப்பொது மையவாகச் செய்யினும் இருவர்க்கேற்கும் பொதுமுகச் சாயற்காண்பதரிது. அளவிற்குரிமையாவது; எலியுடற்கியானைத் தலையும் யானையுடற்கெலித்தலையு மேலாதனபோற் பொருளை விரித்தவளவிற்கதன் முகமாகிய பதிகவளவுந் தகுவதாத லளவிற்குரிமை யெனப்படும். ஆயினும் பதிகவுறுப் பின் மிக்கநெடுமையிற் குறுமை நன்றெனக் கொள்க.

இதற்கெலா முதாரணமாம்படி திருவள்ளுவநாயனார் பயனென்றெடுத்துத் தேற்றப் பொருள்வகைக் கியற்றமிழாய் விரித்துரைப்பப் பதிகமாவது, வேதநூன்முத லெவ்வகை நூலுங் கல்லாதுணரவுஞ் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கடலாகிய வொருமெய்க் கடவுடன்றிரு வடிமலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி, யிருளிரா விடத்து விளங்கிய வொருமீன் போலவும் பாலைச் சுரத்தரி தலர்ந்த பதுமம்போலவு மெய்யாஞ் சுருதிவிளக்காதிருளே மொய்த்த நாட்டின் கண்ணுங் கடவுளேற்றிய ஞானத் திரு விளக்கெறிப்பத் தெளிந்துணர்ந் தெங்குமொரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவருரைத்த பலவற்றொன்றை நான் றெரிந்துரைப்பத் துணிந்தேன். அந்நாயனார் தந்தபயனெனும் பெருங்கடலாழத்தின் மூழ்கி யாங்குடை யருமணி யொருங் கெடுத்தொரு சிறு செப்பினடைத்தாற் போலத் திருவள்ளு வரது பயனெலாம் விரித்துப் பகரும்படி நான் வல்லனல் லேனகையினக் கடற்றுறை சேர்ந்தொரு மணியெடுத்துக் காட்டலுணர்ந்தேன். அவர் சொன்ன குறளினொன்றே யிங் ஙன நான் விரித்துரைப்பத் துணிந்தேன். அஃதாவது:—

“மனத்துக் கண் மாசிலனாத லனைத்தற
னாகுல நீர பிற”.

என்றது. இல்லறந் துறவறமென் றிவ்விரண்டனுள்ளு மடங்கி நிற்கு மெல்லா வறங்களு மனத்தின் றூய்மையாற் பெறும் பெருமையே தருமமெனவும், மனத்தினுண் மாசு கொண்ட வன் செய்யுந் தவமுந் தானமு மற்றையாவு மறத்தினரவ மாவதன்றி யறத்தின் பயனுள வல்ல வெனவு, மக்குறளிரு பயனிவை யென விரித்துக் காட்டுதும். விரிப்பவே மெய்யும் பொய்யும் விளக்கி யுட்பயன்றரு மெய்யறத்தின் றன்மையே வெளியாயிஃதொன்றுணர்ந்து நாமதற் கொப்ப நடந்தா லிது வீடெய்தும் வழி யெனக் காணப்படும். பெரும் பொருணேர்ந்து பொய்ம்மணி கொள்வது கேடன்றாயினும் பொருளை நேர்ந்து முடலை வாட்டியுமுயிரை வருத்தியு மேற்

கதி வீட்டிற்செல்லாச் சில பொய்யறங்களை யீட்டுவதினுங் கேடாமன்றோ? இதனை விலகித் தன்னுயிராக்கங் காப்பது வேண்டியிக்குறட் பயனாராய்வது நன்றேயெனவிப்பதிகத்துரிய தெய்வவணக்கமுஞ் சொல்லக் குறித்த பொருளைத்தொகையா யுரைத்ததுந் தெளிவாயிரு பிரிவாக வகுத்ததுங் கேட்பதற் கிணக்கமாவதற் கவையடக்கமு மாசையாவதற் கப்பொருண் மாட்சியு மருமையும் பயனு முறையே வந்தவாறு காண்க. இசைத்தமிழ்ப் பதிகத் துதாரணமாகக் கம்பருரைத்த பதிக முப்பாப் பாயிரத்தைக் காண்க. அவற்றுண் முதற்பாத் தெய்வ வணக்கமும் பின்னிரு பாவுஞ் செய்பொருளுரைத் தலும் பின்னுற்பாவினே டவையடக்கமு மற்றவை தன் கதை மாட்சியு மருமையும் பயனும் வந்ததறிக.

(தொடரும்)

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

பாலை

பொருள்வயிற் பிரிந்து செல்லுந் தலைமகனது கருத்தைத் தன்னிடம் சொல்லிய தோழிக்குத் தலைவி வருந்திக் கூறுவது.

கோப்பெருஞ்சோழன்

20. அருளு மன்பு நீக்கித் துணை துறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக;
மடவமாக மடந்தை நாமே.

என்பது செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தியுரைத்தது.

பதவுரை:—மடந்தை—தோழி, அருளும் அன்பும் நீக்கி—அருளையும் அன்பையும் நீக்கிவிட்டு, துணை துறந்து—துணையானவர்களையும் நீக்கிவிட்டு, பொருள்வயின். பிரிவோர்—பொருள் காரணமாக அதனை விரும்பிப் பிரிந்து செல்பவர், உரவோராயின்—அறிவுடையோர் என்பாயாயின், உரவோர்

உரவோராக—அவ்வாறு பிரிந்து செல்லும் வன்மையுடையார் அறிவுடையோராகவே இருக்கட்டும், நாம் மடவம் ஆக—நாம் அறிவில்லாதவராகவே இருப்போம்.

அருள்—வருந்தும் எல்லா வுயிரிடத்தும் இயல்பாகச் செல்வதாகிய கருணை.

அன்பு—தொடர்புடையார் மாட்டே செல்வதாகிய நேசம்.

உரம்—வன்மை, அறிவு. மடவம்—அறியாத்தன்மை யுடையேம். மடமை—அறியாமை. மடந்தை—தோழி—அண்மைவிளி.

மேற்கோள் விளக்கம்

1. 'அன்பிலன் அறனில்ன்' —(கலி. 74—6)
2. "அன்பும் அறனும் உடைத்தாயின்" —(குறள்-45)
3. 'அன்பும் அருளும் நீக்கி' —(புறம். 5—5)
4. 'பல்வேறு நிலையினும்' என்றதில் தோழி பிரிவுணர்த்திய வழிச் செலவழுங்கக் கூறியதற்கு இச்செய்யுள் மேற்கோள். —(தொல்—கற்பு—669)
5. 'மடவமாக மடந்தை நாமே'—வியங்கோள் ஐம்பால் மூவிடத்தும் வரும்; ஏவலுளடங்கா என்பதற்கு மேற்கோள் —(நன். மயிலை. பக். 212)
6. "அருளு மன்பு......மடந்தை நாமே" பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறியதற்குச் செய்யுள் —(தொல். அகத். இளம். சூ. 44·உரை)

உரன்—அறிவுடைமை, வலிமை

1. "உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து" —(குறள். 34)
2. கரவில் வளமலைக் கல்லருவி நாட
வுரவில் வலியா யோருநீ—யிரவின்
வழிகடாஞ் சால வரவரிய வார
விழிகடா யானை யெதிர். —(திணைமாலை. 150—11)

"மடவமாக மடந்தைநாமே" வியங்கோள்வினை முற்று வாழ்த்துதற் பொருண்மைக்கண் வந்ததற்கு மேற்கோள். —(இலக்கணவிளக்கம் பக். 213)

"தலைவர் உரனுடைமை மடமை, தலைவி மடமை உரனுடைமை" என்பது குறிப்பால் விளங்கிற்று.

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை
பயன்—செலவழுங்குவித்தல்.

முல்லை

கார்காலத்து மீள்வதாகக் கூறிச் சென்ற தலைமகன், அப்பருவம் வந்தும் வாராததனால், "இனித் தலைவியை ஆற்றுவிப்பது எவ்வாறு?" எனக் கவன்ற தோழிக்குத் தலைவி "ஆற்றுவல்" என்று கூறியது.

ஓதலாந்தையார் பாடியது

21. வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானே தேறே னவர்பொய் வழங்கலரே.

என்பது பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி அவர் வரக் குறித்த பருவவரவின்கண், இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு என்று தன்னுள்ளே கவன்றாட்கு அவளது குறிப்பறிந்த தலைமகள், "கானம் அவர் வரும் கார்காலத்தைக் காட்டிற்றாயினும், யான் இது கார்காலம் என்று தேறேன், அவர் பொய் கூறார் ஆகலின்" எனத் தான் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.

பதவுரை:—வண்டு படத் ததைந்தகொடி - வண்டுகள் மொய்க்கும்படியாக நெருங்கிய முல்லைக் கொடியின், இணர் இடை இடுபு—பூங்கொத்துக்களை நடுவில் அமைத்து வைத்து; பொன் செய் புனை யிழை கட்டிய மகளிர் - பொன்னாற் செய்த அழகிய ஆபரணங்களை யணிந்த பெண்களது, கதுப்பில் தோன்றும்—கூந்தலைப் போலக் காணப்படும், புதுப் பூங் கொன்றைக் கானம்—புதிதாகிய பூவை யுடைய கொன்றை மரங்கள் நிறைந்த காடு; கார் எனக் கூறினும் — கார் காலம் வந்து விட்டது என (பூ, காய்களைக் காட்டி) அறிவித்தாலும், யானே—நானே, தேறேன் - அதனைக் கார் காலம் என்று தெளிய மாட்டேன், (ஏனெனில்) அவர் பொய் வழங்கலரே அவர் ஒருகாலும் பொய் பேசமாட்டார் ஆதலின். யானே - ஓகாரம் பிரிநிலை.

ததைந்த - நெருங்கிய. கொடி - கொன்றையைச் சேர்ந்த முல்லைக்கொடி. முல்லைக்கொடி கொன்றை மரத்திற் படர்ந்து இருப்பப் புட்பித்துக் காய்த்திருப்பது பெண்கள் அணிகளணிந்து நிறைந்த கூந்தலோடு விளங்கும் காட்சியைப் பொருந்தும். கொன்றை மரத்தைப் பெண்களா

கவும், தன் மீது படர்ந்திருக்கும் முல்லையின் பூ உடையாகவும், கொன்றையின் மஞ்சள் நிறப்பூக்கள் பொற்கலன்களாகவும், காய்கள் சுருண்டு அவிழ்ந்து தொங்கும் கூந்தலாகவும் கூறப் பட்டிருத்தல் அறிக. முல்லை நிலத்திற்குரிய முல்லையும் கொன்றையும் கார்காலத்தில் பூக்கு மியல்பின.

மேற்கோள் விளக்கம்

1. "வண்டுபட.........வழங்கலரே"—இதுபருவங் கண்டுழியும் பொய் கூறுர் என்று ஆற்றியிருந்தது.

—(தொல்—அகத். 46)

2. "வண்டுபட......வழங்கலரே"—இது கானங் காரெனக் கூற வும் வாரார் என்றவழி அது கூறினும் யான்தேறேன் எனப் பிரிநிலை ஓகாரத்தாற் பிரிந்தது. (தொல்—கற்பு. 666)

3. "யானே தேறேனவர் பொய்வழங்கலரே"—எனப் பிரி நிலைக்கு உதாரணம். (தொல்—எழுத்து—நச்—சூ 290)

—(தொல்—சொல்—சேனு—சூ 256)

4. "கானங்...........வழங்கலரே"—பிரிநிலைக்கு உதாரணம்

—(தொல்—சொல்—தெய்வ சூ 252)

'யானே தேறேன்'—'யானேதெறேன்,'—(பிரதிபேதம்.)

வண்டு படத்ததைந்த என்பதற்கு வண்டு வீழ்ந்து சிதறின என் றும் கூறலாம்.

"வண்டுபடத்ததைந்த கண்ணி" (அகநானூறு—களிற்றியானை நிரை 11)

பெண்கள் கூந்தலுக்குக் கொன்றைக்காய் உவமை கூறுவது இயல்பு.

"கொண்டலுங் கூந்தற் பனையும்
கொன்றைக் காயும் மிருளுங்
தண்டலை யுங்கார் மணலுஞ் சைவலமும்
வண்டினமுங் தண்குழலை யொப்பாம்"—

(உவமானசங்கிரகம். 1)

மெய்ப்பாடு-பிறன் கட்டோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல்
பயன்—ஆற்றுமாறு அறிவித்தல்

பாலை

தலைவனது செலவைக் குறிப்பால் அறிந்த தலைவி ஆற்ருளாக வருந்துவதைக்கண்டு தோழி, "தலைவர் கருதிய செலவு நின்னைவிட் டுப்பிரிந்து செல்லும் செலவன்று; நின்னை யுடன்கொண்டு செல்லும் செலவாகும்" எனத்தலைவியைத் தெருட்டி வற்புறுத்திக் கூறியது.

சேரமானெந்தை பாடியது

22. நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரல்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழும்
தேமூர் எண்ணுதல் நின்னொடுஞ் செலவே.

என்பது செலவுக் குறிப்பறிந்து ஆற்ருளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

பதவுரை:—நீர் வார் கண்ணை—(அழுவதால்) நீரைச் சொரிகின்ற கண்ணை யுடையவளாய், நீ இவண் ஒழிய—நீ இவ்விடத்தில் வருந்தியிருக்க, யாரோ பிரிகிற்பவரே—உன்னை விட்டுப் பிரிந்து செல்லற்கு வல்லார் யாவரே? சாரல்—மலைச் சாரலினிடத்து, சிலம்பு அணிகொண்ட வலஞ்சுரி மராஅத்து—மலை தனக்கு அழகுமிக்க அணியாகக் கொண்ட வலமாகச் சுழலும் சுழியினைக்கொண்ட மலர்களையுடைய வெண் கடம்பமரத்தினது, அம்சினை—அழகிய கிளைகள், வேனில் கமழும்—இளவேனிற் பருவத்து மணம் வீசுகின்ற, தேம் ஊர்—இனிய இவ்வூரிலுள்ளார், எண்ணுதல்—எண்ணுவது (என்னையோ எனின்), நின்னொடும் செலவே—நின்னை அவர் உடன் கூட்டிச் செல்லும் செலவினையேயாம். (ஆதலின் வருந்தாதே என்றவாறு.)

"தேம் ஊர் எண்ணுதல்—இனிய ஊருக்குச் செல்லத் துணிந்து தலைவர் எண்ணுதல், நின்னொடும் செலவே—நின்னையும் உடன் கூட்டிச் செல்லும் செலவினையேயாம்" என்று கூறுதலும் பொருந்தும்.

வார் கண்—வினைத்தொகை. கண்ணை—குறிப்பு முற்றெச்சம். யாரோ—ஓகாரம் எதிர்மறை. வலம் சுரி மராஅத்து—வலமாகச் சுழித்த பூக்களை யுடைய வெண் கடம்பு மலர் என்பதை

"கொடுங்கால் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு." (ஐங். 383)

என்பதாலறிக.

வெண்கடம்பு இளவேனிற் பருவத்துப் பூக்கும்:—

"அவரோ வாரார் தான்வந் தன்றே
வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம்

மணங்கமழ் தண்பொழில்மலரும்பொழுதே'' (ஐங்.)
என்பதாலறிக.

சிலம்பு—மலை. தேம்—இனிமை. ஊர்—இடவாகுபெயர்.

மேற்கோள் விளக்கம்:—

'நீர்வார்கண்ணே.'—மூவிடத்து ஐம்பாலினும் தன்மைப் பன்மை வினைக்குறிப்பு முற்றுவினை எச்சக்குறிப்பாயினதற்கு உதாரணம்.
(நன். சங்கா. பக். 185: நன். மயிலை. பக். 222.)

'நீர் வார்கண்'—'நீர்வார் கண்'—(புறம் 113-6)

'நீர் வார்கண்ணேம்'—(நற். 143.)

''தன்மைப்பன்மை வினைக்குறிப்பு முற்றுவினை எச்சக்குறிப்பாயினதற்கு மேற்கோள்''—(நன் மயிலை. சூ. 350: நன். விருத். சூ. 351: இலக் விளக்—சூ. 250—உரை)

மெய்ப்பாடு—பிறன்கண் தோன்றிய இழிவுபற்றிய அழுகை.

பயன்—ஆற்றுவித்தல்.

காணப்படாது காண்டல்

[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார். B. A. (Hons.)]

ஆங்கிலப்புலவர்களுள் ஒருவராகிய ஸ்டிவன்சன் (Stevenson) என்பவர் எழுதிய கட்டுரையொன்றுள் * அவர் கூறியிருப்பதுகொண்டு அன்னார் மிசெண்டன் (Missenden) என்ற ஒரு நகரத்தின்கண் ஓரிரவிற் சுற்றிவருங்கால் ஓரோவியத்தைப் பிறராற் காணப்படாது கண்டதாகவும், அதனால் அளப்பரிய வுவகையெய்தியதாகவும் அறிகின்றோம். அவ்வூரில் இருள் சூழ்ந்த ஓரிரவில் அவர் ஓர் இல்லத்தின் சாளர வழியே உள் நோக்கியதாகவும், அக்காலை ஆண்டுக் கவனித்துக் கேட்டுக் கொண்டு மடிமீதிருந்த ஒரு குழவிக்கு அழகுடைச்சிறுமி ஒருத்தி ஒரு கதை சொல்லிக் கொண்டிருந்ததாகவும், அவண் மருங்கே ஒரு கிழவி கணப்பின் முன்னர் அமர்ந்தவண்ணம் தூங்கி விழுந்து கொண்டிருந்ததாகவும், அதனைத் தாம் உள்ளிருப்பவர் காணாது கண்டதாகவும், கண்டு பெருமகிழ்ச்சியடைந்ததாகவும் அவர் வரைந்துள்ளார்.

இன்னணம், பிறராற் காணப்படாமல் பிறரைக்காணும் வழக்கம் தமிழரிடத்துமுண்டு என்பது தமிழிலக்கியத்தால் அறியக்கிடக்கின்றது. காட்டாகச் சில ஈண்டுத் தருவல், சீவ

* Autumn Effect.

கனைத் தனியளாய்ப் பிணமலிகாட்டில் விசயை யென்னும் அரசி பெற்றெடுக்க நேர்ந்த இடுக்கணைப் பலர் சீவகசிந்தாமணி யால் அறிந்திருப்பர். அவள் அவலித்திருந்துழிச் சண்பக மாலை யென்னும் தோழிவடிவு தாங்கி ஒரு தெய்வதம் அவள் பால் அணைந்து "இந்நம்பியின் ஆணைப்படி உலகமெல்லாம் பின்னர் நடக்கும். பகைவனை இவன் வெல்லும் பொருட்டு இவனை விரைவினில் ஒருவன் கொண்டுபோவன். நாம் மறை வது கடன்." எனக் கூறிற்று, அவளுங் குழவியிடம் விடை சொல்லிக்கொண்டு அத்தோழியோடு மறைய நின்றாள். அவள் மறைய நின்றுழித் தற்செயலாக ஒருவன் வந்து அக்குழந் தையை எடுத்தணைத்துச் சென்றான். அவன் குழவியை எடுக்குங்கால் அது தும்ம, தோழி "சீவ" என வாழ்த்தினாள். விசயையும் "பகைதவ நூறுவாயாக" என மனத்திற் கூறி யேத்தினாள். அவள் அந்நேரம் மறைய நின்றதைத் திருத்தக்க தேவர்,

"புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்ததேபோல்
ஒல்கியோர் கொம்புபற்றி ஒருகணால் நோக்கி நின்றாள்"

என வரைகின்றார். அவள் கொம்பின் பாங்கர் நின்ற தற்கு ஒப்பாகக் கொம்பைப் பற்றிநின்ற கருவிளைக் கொடி யையும், அவள் ஒரு கண்ணினால் நோக்கியதற்கு ஒப்பாகக் கருவிளைக் கொடியிற் பூத்த ஒரு பூவினையும் வைத்தமைத்த தேவர்நயம் வியக்கற்பாற்று. அவள் ஒரு கொடியென்றும், அவளது கண் கருவிளைப்பூ என்றும் உவமம் பொருந்துமாறு வைக்கப்பட்டுள்ள சிறப்புக்கண்டு இன்புறுது வேறென் செய் வது? கொம்பின் பக்கத்தே மறைந்து நின்ற அவள் இருகண் ணும் தோன்றுமாறு நின்றனளேயாயின், தனதாடை முதலான சிலவும் தோன்றுதலுமாகும் என அஞ்சி, ஒருசார் ஒதுங்கி, ஒரு கண்ணால் குழந்தையது போக்கில் நோக்கம் வைத்து, வந்தவன் தன்னைக்காணாது, அவன் குழவியை யாது செய்கின்றான் எனத் தான்மட்டும் பார்த்துநின்ற படத்தைத் திருத்தக்கதேவர் ஈண்டுத் தந்துள்ளார்.

இனி, சில பெண்டிருடைய இயல்பு பிறர் தம்மைக்காணுங் காற் காணாது, காணாக்கால் காண்பது என்பதைப் பண்டைத் தமிழர் கண்டறிந்திருந்தனர். அதுபற்றியே திருவள்ளுவரும்,

"யானோக்குங் காலை நிலனோக்கும்; நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்."

எனக் "குறிப்பறிதல்" என்னும் அதிகாரத்தின் கண்ணே பொறித்து வைத்தார். "நோக்கினாலும் நோக்காமல், நோக்

காக்காலும் நோக்காமல் தலைகுனிந்தோ அன்றி வேறு பக்கம் பார்த்தோ அசட்டைசெய்து செல்லும் பெண்ணல்லள் உன்னை விரும்புபவள்" என்பதை ஒவ்வொருவனும் அறிந்துகொள்ள வேண்டும் என்று அவர் கருதினர்போலும்! ஆனால், அக்குறளை அறிந்த சில விலைமாதரும் பிறர் நோக்காக்காலும் தாம் நோக்காதிருத்தல் கூடும். அதுபற்றி அவர் நல்லார் எனக்கோடலோ, அன்றிக் குலமகளிர் சிலர் பிறர் நோக்குங்காலும் தாமும் நோக்குதலால் நல்லரல்லர் எனக் கோடலோ நியாயமன்று. பெரும் பான்மையும், பிறர் நோக்குழிப் பெண்டிர் நாணத்தாற் றலைகுனிவர் என்பதும், பிறர் நோக்காதகாலையில் தாம் பிறரறியாத விதத்தில் பார்த்துக் கொள்வர் என்பதுமே கொள்ளக் கிடப்பது. இனி, தனக்கினிய தலைவனைக் காணும் பெண், அவனோடு புணர்ச்சி தலைப்படாமுன், எதிரெதிர்நோக்காள் நாணத்தால் வெட்கி என்பதும் ஈண்டறியத்தக்கது. அவள் தன்னை அவன் பாராதநேரத்தில் தான்மட்டும் தனக்கினிய அவனைப் பார்த்து உள்ளத்தே கழிபேருவகை யெய்துவது தமிழர் மரபுவழிப் பட்டது என்பது முற்காட்டிய குறளால் இனிது விளங்கும்.

இங்ஙனம், பிறர் தன்னைக் காணாது தான் பிறரைக் காண்பதற்கு உதவியாயிருப்பன தூண், கதவு முதலியன. இவற்றையே பெரும்பாலும் பெண்டிர் துணைக்கொள்வது கண்கூடு. இலக்கியச் சான்றாகப் புறநானூற்றில்,

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோ என வினவுதி"

என்னும் அடிகளைக் காண்கின்றோம். இதனால், காவற் பெண்டு என்ற செவிலித்தாயொருத்தியை ஒரு சிறு பெண் தனக்குரிய அவளது மகன் எங்குச் சென்றிருக்கிறான் என வின்வினளென்றும், வினவியக்கால் அவள் ஒரு நல்ல தூணைப் பிடித்துக் கொண்டு மறைய நின்றாள் என்றும் அறிகின்றோம்.

வினவப்பட்டார்க்குத் தான் தோன்றாது ஒருபுறம் மறையநின்று இச்சிறுமி கேட்டது போன்ற இன்னொரு படத்தை நாம் காணக்கூடும். அது சிலப்பதிகாரத்தே இளங்கோவடிகளாற் றீட்டப்பட்டுளது. கண்ணகியுங் கோவலனுஞ் சிலம்பினை விற்று வாணிகஞ் செய்ய மதுரையை நோக்கிப் புறப்பட்டவர்கள் காட்டுவழியே சென்று ஐயையது கோட்டத்தை அடைந்தாராக, ஆங்கு வேட்டுவ மகளாகிய சாலினி என்னுந் தேவராட்டி சீறடி நொந்து வருந்தியிருந்த கண்ணகியை நோக்கி "இவளோ, கொங்கைச்செல்வி, குட

மலையாட்டி, தென்றமிழ்ப்பாவை செய்த தவக்கொழுந்து, ஒருமாமணியாய் உலகினுக்கு ஓங்கிய திருமாமணி" என்று தான் தெய்வமுற்ற தன்மையினாற் கூறினாள். கணவனெதிரே இன்னணம் தன்னைப் புகழ்ந்த மூதறவாட்டியின் மயக்கத்தை நினைந்து கண்ணகி வெட்கி நகைத்தாள். ஆனால், இப் புன்னகை அத்தேவராட்டிக்குப் புலப்பட்டதோவெனின், இல்லை. ஏன்? கண்ணகி அங்ஙனம் மூரலரும்பினதைக் கண்டாளல்லள் தேவராட்டி. தன்முகத்தை மூடிக்கொண் டிருந்தனளோ தேவராட்டியெனின், அல்லள். பின் யாதே காரணம் அவள் காணாமைக்கு? கண்ணகி, தனது அரும்பெறற் கணவனது பெரும் புறத்து ஒடுங்கிய பின்னரே புன்முறுவல் பூத்தமை என்க. இயல்பாக அவள் முகத்தே புன்சிரிப்பு இருப்பதுண்டு. ஆனால், தேவராட்டியின் சொல்லைக் கேட்ட வுடன் ஏற்பட்ட உணர்ச்சியினால் புதிதான ஒரு புன்னகை தோன்றிற்று. அத்தோற்றத்தைத் தேவராட்டி காணக் கூடாது என்பது கண்ணகியின் கருத்து. தான் புகழப்பட்ட அந்நிலையில் தன் முகத்தைக் கணவன் காணக்கூடாது என் பதுங் கண்ணகியின் கருத்து. அவள் அதனால் கோவலனது முதுகுபுறமாக மறைந்துகொண்டு தேவராட்டியின் செயலைக் காண்பாளாயினாள். ஈண்டு, அவள் மறையநின்று காணத் தூணேபோல உதவியது கணவன்றன் தோளே என்க.

மற்றோரிடத்தில், மறைய நின்று காணவுதவியது கத வொன்று என்பது அகநானூற்றுப் பாடலொன்றால் புலப் படுகின்றது. பவளம் முன்னில்லாத வாயினையும், மாசில்லா அங்கையினையும், நகைபடு தீஞ்சொல்லினையும் உடைய பொலந் தொடிப் புதல்வனொருவன் சிறுதேருருட்டித் தெருவில் விளை யாடிக்கொண்டிருந்தான். அவன் தனியனா யிருத்தலையும், தன்னிடம் வந்து செல்வானை யொத்திருத்தலையும், காண்போர் இல்லாமையையும் நினைத்து, அவ்வழி வந்த ஒரு பரத்தை அவனை "என்னுயிரே, வருக" என மார்போடு அணைக்குந் தறுவாயில், ஒரு சொல்எழுந்தது. அது யாது? "என், குட்டி, மயங்குகிறாய்? நீயுந் தாயே இவற்கு" என்பதே. இதைக் கேட்ட பரத்தை தனது குட்டு வெளிப்பட்டதற்கு நாணி, கையொடுபட்ட கள்வனைப்போலத் தலைகுனிந்து நின்றாள். இவ்வளவுக்குங் காரணம் யாது? தெருப்பக்கத்துக் கதவண் டைப் பிறர் தன்னைக் காணாமற் றான்மட்டும் நின்று தனது தனயனைப் பிறர் எடுத்துச்செல்லாவண்ணம் பார்த்துக்கொண் டிருந்த ஒரு பெண்மணியன்றோ? ஒருவருங் காணவில்லை என நினைத்துக் குழவியைப் பரத்தை எடுக்குங்கால், தன்வருத்தம் ஒருபுறம் இருப்ப, இப்பெண்மணி பரத்தையின் அறியாமை

MADRAS

காரணமாக எவ்வளவு நகைத்திருப்பள் என்பதை ஊகித்தறியின், காணப்படாது காண்டலால் வருமின்பத்தை நாம் அறிந்தவராவோம்.

இன்னொரு சிறந்த படத்தை மருதக்கலியிற் காணலாம். பரத்தை காரணமாகப்பிரிந்து சென்ற தலைவனால் நிகழ்ந்த நோயைத் தன் மகன்முகம் நோக்கித் தணித்துக்கொண்டு வந்தாள் ஒரு பெண். அவள்தன் புதல்வன் நடைவண்டியைச் செலுத்தி நடைபயின்று கொண்டு வந்தான். அவனை அவள் எடுத்தணைத்து உச்சிமோந்து "கண்ணே! உன்னை வளர்க்குந் தாயார் சொல்லித்தந்த சொற்கள் சில சொல்லு. அவை எனக்கு அமிழ்தம் போன்றிருக்குமே" எனக் கூறினாள். கூறிய அக்காலையில், அவளது தோழியும் உடனிருந்தாள். புதல்வனோ "அப்பா, அப்பா" எனச் சொல்லிக்கொண்டேயிருந்தான். தாய்க்குச் சினம் உண்டாய் விட்டது. அவள் தோழியை நோக்கி, "பார்த்தாயா இதனை? கருணையற்ற அவர் இவன்வாயினின்றும் நீங்கவேமாட்டேன் என்கிறார்!" என்றாள்; என்று சொல்லி அவனைத் தனது தோளொடு சேர்த்து அவன் வாயை யடக்கமுயன்றாள். ஆனால், அவன் பின்னும் "அப்பா, அப்பா" என அழைத்தபடியே யிருந்தான். திரும்பிப் பார்த்தனள் தாய். அவள் கண்டது யாது? தனது கணவனுருவம். அவர் வந்து முன்னரே ஆண்டு நின்று தன் செய்கையைக் கண்டுவந்தார் என்பதை அறிந்தாள், நாணினாள், பேச்சை மாற்றினாள். அவளாற் காணப்படாமல் அவள் செய்கையைக் கண்டு நின்ற கணவன் மனத்தெழுந்த உணர்ச்சி காணப்பட்டுக் கண்டக்கால் நிகழ்ந்திருக்காது என்பது திண்ணமேயன்றோ?

அன்பர்களே, காணப்படாது காணுங்கள். காணுங்கால், காணப்படாமல் யாவரையும் எதனையும் காண்பானொருவன் உளன் என்பதையும் நினையுங்கள். அந்நினைப்போடு காண்பீர்களாயின், அக்காட்சியான் வருமின்பம் மாட்சி மிக்கதாகும்.

விரைந்து பெறுமின்கள் விரைந்து பெறுமின்கள்

திருவள்ளுவர் நினைவுமலர் (1935)

அழகிற் சிறந்தது; படங்கள், நிறைந்தது

பொருள்வள மிகுந்தது

(நம்மிடங் கிடைக்கும்) குறைந்த விலை அணா 9.

உவகைப் பகுதி

மல்லிகையும் கனகாம்பரமும்

[திரு. வே. பா. கமலநாத முதலியார் அவர்கள்]

ஆகாயந்தன்னில் வாகாய்த் தோன்றி, அதனிடை ஊர்ந்து சென்று, பகலெல்லாம் வெந்தழலைப் பரப்பிய பரிதியும் மேற்கடலில் ஆழ்கின்றான்; வயிறாரப் புல் மேய்ந்த ஆனினங்கள் வீடு நோக்கி விரைந்து செல்கின்றன; புள்ளினங்களும் தத்தம் கூடும், மரப்பொந்தும் நோக்கிப்பறந்து செல்கின்றன; வண்டினமும் மலர்களில் மதுவுண்டு மயங்கி அமர்கின்றன. வெய்யவன் மேற்கடலில் படவே செய்யவளுடன் பிறந்தோனும், இன்னலுற்றார்க்கு இன்பம் நல்குவான்போல் அந்தரந்தன்னில் சுந்தரமாய்த் தோன்றுகிறான். பன்மீனடுவே வெண்ணிலவு தோன்றியது கண்ட தாமரையும் தன் கலையிதழ் மூடிக்கொள்கின்றாள்! நாயகன் வரவுகண்ட குமுதமும் அது கண்டு 'பக்கெனச் சிரிக்கின்றாள்'. மென்காற்றின் சுகத்தால் செடிகளும், கொடிகளும் தாபம் நீங்கி அசைந்தாடுகின்றன! எங்கும் பாலொளி! எங்கும் சாந்தம்!! எல்லாம் இன்பமயம்!!!

மதனபுரமென்னும் அழகிய ஜமீனின் சொந்தக்காரராகிய சுந்தரேசரின் மாளிகை இந்நிலவொளியில் வெகு அழகியதாய்க் காணப்படுகின்றது. சலவைக் கற்களால் அமைக்கப்பட்ட அம்மாளிகை அதிகச் சித்திரப்பாடமைந்தது. அமரரும் விரும்பும் அழகினைப் பெற்று அது விளங்கியதென்பது மிகையாகாது.

இதோ! கண்கவர்வனப்பொடு திகழும் மாளிகையினின்றும் மங்கையரிருவர் வெளியே வருகின்றனர். இவர்கள் ஜமீன்தாரரின் பெண்கள்; மாளிகையின் எதிரிலிருந்த பூங்காவனத்தை நோக்கிச் செல்கின்றனர். இவ்விரு பூங்கோதையருள் மூத்தவளாகிய மோஹனா, அழகெலாந் திரண்டு ஒருருவெடுத்தாலன்ன பேரெழில் வாய்ந்து விளங்குகின்றாள். இளையவளாகிய சுலோசனாவோ சற்றுக் கறுத்து இருந்தாலும் நல்ல முகக்களையும் அழகுமுடையவளாய் இருக்கின்றாள். அழகுக்கேற்றவாறு அருங்குணமுமுடையவர்களாய் இவர்கள் இருந்தமை பொன்மலர் நாற்றமும் பெற்றதுபோலிருந்தது.

403

பூங்காவுட் புகுதலும், மோஹனை தன் தங்கையை நோக்கி, "தங்காய்! இந் நிலவு என்ன அழகாய் வீசுகின்றது! தாரகைக் கணங்கள் தன்னைச்சூழ, உடுபதி பவனி வருவது அரசர், அமைச்சர் முதலானோர் தம்மைச்சூழ உலாவிவருதல் போலன்றோ இருக்கிறது! நீலவானத்தில் கோலத் தாரகைகள், வைரக் கற்கள் பதித்தனபோல் விளங்கி, 'மினுக் மினுக்' எனக் கண் சிமிட்டுவதுபோல் ஒளி கால்வது என்ன அழகாக விருக்கிறது! மென்காற்றுச் 'சில்'லென வீசுவது உடலுக்கின்பம் தருகின்றது. கண்ணுக்கு இனிமையும், உடலிற்கின்பமும், மனத்திற்கு மட்டிலா மகிழ்ச்சியும் தரும் இந்நிலவொளியில் உல்லாசமாய் நாம் இந்தப் பூங்காவில் பேசிச் சுற்றிவரலாம் வா!" என்றாள் சுலோசனை. "அக்காள்! அப்படியே செய்யலாம். பாலொளி பரப்பும் அம்புலியைக் கண்டாலே கள்ளமனமுடையவர் உள்ளமும் குளிருமல்லவா? எங்கும் சாந்தமே நிலவும் இவ்வேளை நாம் ஏகாந்தமாய்ப் பூம்பொழிலில் ஓரிடமமர்ந்து இனிமையான பாட்டுக்களைப் பாடிக் களிக்கலாமே!" என்றாள். "அப்படியே செய்யலாம் வா" என்று மோஹனை தன் தங்கையின் கையைப் பிடித்துக் கொண்டு மெள்ளப் பூங்காவில் நுழைந்தாள்.

பூஞ்சோலை யினழகைக் கண்டு, உவகையுற்று உலாவிய பெண்மணிகள், ஆங்கிருந்ததொரு மல்லிகைச்செடியை நெருங்கிவரலும், திடுக்கென அசைவற்று அப்படியேநின்றுவிட்டனர். பேச்சரவம் ஆங்குக் கேட்டதே இவர்களுக்கு அச்சத்தை விளைத்ததுபோலும்! பேயோ, பிசாசோவென மருண்ட இவர்கள், பின்னர் ஒருவாறு மனந்தேறி மேற்சென்றார்கள். "ஒரு வேளை ஆதரம் பெருகும் காதலர் யாரேனும் கரந்து நின்று உரையாடக்கூடுமோ?" என்றாள் சுலோசனை. "மனித வடிவமே புலனாகவில்லையே, நிலவொளி பட்டம் பகலாய்க் காய்கின்றதே" என்று கூறிக்கொண்டே, சுற்றிலும் பார்த்த மோஹனை 'தங்காய்! இதென்ன ஆச்சரியம்! இதோ பார்!! இந்தக் கனகாம்பரமன்றோ பேசுகிறது!" என்றாள். தான் ஒன்றும் செடிகள் பேசுவதைக் கேட்டிராதவளாதலால் சுலோசனை, பெருவியப்புடன், "ஆம் அக்காள்! நாம் இங்கே மறைந்து நின்று கேட்போமா?" என்றாள். "ஆஹா! அப்படியே செய்யலாம்" எனக்கூறி, மோஹனையும் சுலோசனையும் மறைவில் நின்று, கனகாம்பரமும் மல்லிகையும் உரையாடுவதைக் கவனித்துக் கேட்டிருந்தனர்.

"மல்லிகையாளே! நான் பூக்கத் தொடங்கியபின் உன்னை இவ்விடம் இருப்பார் அதிகம் முன் போல் விரும்புவது

காணேமே! வர, வர, உன் மதிப்பே குறைந்துவிட்டதே! "கர்நாடகக்காரி" என்று உன்னைக் கருதி நாகரிக நாரீமணிகள் சட்டை செய்வதில்லைபோலும்!" என்று இறுமாப்புடன், மல்லிகையைப்பார்த்து, மஞ்சட் கனகாம்பரம் மொழியலுற்றது.

"அடடா! அப்படியா சங்கதி!! நன்று! நன்று! என்னைக் கேலிசெய்யவும் வந்து விட்டனையே! நேற்று வந்த உனக்கு, எங்கிருந்தடி அம்மா வந்தது இவ்வளவு செருக்கும் துணிச்சலும்! பார்ப்பாரும் பறிப்பாருமற்றுச் சாலைகளிலும், வேலிகளும், வயலிலும், பாதையோரங்களிலும் முளைத்து வெயிலிற்பட்டு வாடி உலரும் பூவாயிருந்த உன்னைச் சில காலமாகத்தையலர் தேடி வாங்கித் தலையிற்சூடும் மலராய் மாற்றினதாலோ, இவ்வளவு வாய்வீச்சு உனக்கு! காற்றிலகப்பட்டால் காததூரம், இலேசாய்ப் பறந்து செல்லும் பாக்கியமுடைய நீ என்னைப் பரிகசிக்கவும் வந்துவிட்டாய். குண நலம் சிறிதுமில்லாத விலைமகளை விரும்பும் காமுகர் போல, மண நலம் கொஞ்சமுமில்லாத "மேனுமினுக்கி" யாகிய உன்னைக் காரிகையார் விரும்புவது, உன் வண்ணப் பகட்டால் தானே! மலர்கடோறும் சென்று மது உண்டு களிக்கும் சுரும்புகளும் உன்னை விரும்புவது இல்லையே! எங்களைப்போல மண நலம் உனக்கு உண்டா? மணமில்லாப் பூவும் ஒரு பூவாமா? "மல்லிகை, முல்லை மலர்கொய்வோம்; மணமுள்ள மலர்ச்செண்டுகள் செய்வோம்" என்று முற்காலத்தில் பாவையர் பாடி விளையாடினதும் பாரறிந்தது தானே! மணப் பந்தலிலும், மணமக்கள் கழுத்திலும் நாங்களன்றோ அழகுற விளங்குகின்றோம்! சீமந்தப் பெண்களுக்குச் சிங்காரமாய்த் தலையிற் சூட்டுவதும் மல்லிகைதானே! குழந்தைகள் தாலாட்டிலும் "மாமன் அடிச்சானோ மல்லிகைப்பூச் செண்டாலே" என்றொரு அடி இருப்பதும் அறியாயோ? அன்று ஆயர்பாடியில் சோதைப்பிராட்டியார் கமலக் கண்ணனை மலர் சூடிக்கொள்ள அழைத்தகாலை "மருவி மணங்கமழ்கின்ற மல்லிகைப்பூச் சூட்டவாராய்"! என்று கூறியிருக்கிறாரன்றோ? இப்போதும் குழந்தைகட்கு நிலாவைக் காட்டுவார், 'நிலா! நிலா! ஓடிவா!" நில்லாமல் ஓடிவா! மலைமேலே ஏறி வா! மல்லிகைப்பூக் கொண்டு வா!" என்றல்லவா பாடுகின்றனர். மற்றும், காமன் விடு கணைகள் ஐந்தினில் முல்லை மலரும் ஒன்றல்லவா? அதுவும் விடுத்தகாலை, சென்று பாயுமிடம் உச்சியன்றோ? மலர் தோறும் சென்று மதுவுண்டு மயங்கித் திரியும் மதுகரம் மல்லிகையே வெண்சங்காகக் கொண்டு ஊதுவதாய்க் கற்பித்து, எங்களைச்

சிறப்பித்தன்றோ பாடியுள்ளார் புகழேந்திப் புலவரும்! முற்காலத்துக் காவலரின் கன்னிகைகள் காதலோடும் மல்லிகைக் கொடிகளை அருமையாய் வளர்த்தார்களன்றோ? அக்கொடி மலர்ந்த காலத்து அதற்கு வசந்தகால விழாவை, மன்னரும் மகிழ்ந்திருக்கக் கொண்டாடுவது பண்டைய வழக்கல்லவா? விரகதாபந் தணிய மங்கையர் கொள்வது மல்லிகை மலர்ப்பாய லல்லாது கனகாம்பாரப் பாயலோ? முல்லையினழகும் மணமும் உலகறிந்ததுதானே. முருகு விரியும் முல்லைக்கொடிக்கு அன்று கொழுகொம்பிலாது அது அலைதலைப் பொருத பாரி தன் தேரையே ஈந்தது பாரறிந்தது தானே! விரிவஞ்சி இதோடு நிறுத்துகின்றேன். இனியேனும் எங்களை அறியாது அலர் தூற்ற முற்படாய் என்று எண்ணுகிறேன். எங்களை மக்கள் அறவே விரும்பாதிரார். எவ்வாறு நம் தமிழ் நாட்டினில் பல்வேறு சமயங்கள் தோன்றிப் பரவி அழிந்தும் பண்டைச் சமயமாகிய இந்து சமயம் மாத்திரம் இன்றும் அழியாது நிலவுகின்றதோ, எவ்வாறு தமிழ்த் தாய் தன் பண்டைப் பொலிவினை இழந்து, தன் மக்கள் ஆதரவும் குன்றி, தளர்வுற்று நிற்பினும், சீரிளமையுடனும் திடமனத்தோடும் நற்காலம் நோக்கி இருக்கின்றனளோ, அவ்வாறே, பன்னெடுங் காலமாய்ப் பெருமையுடன் வாழ்ந்து வரும் நாங்களும் விதவிதமான மலர்கள் தோன்றி மக்கள் மனதைக் கவர்ந்து நின்றும், சீரும் சிறப்புமாய்த்தா னிருந்துவருகிறோம். மக்களும் எங்களை ஆதரித்துத்தான் வருகின்றனர். "ரோஜா" மலரை "ஜோராய்"த் தலையில் அணிய சிலர் விரும்பலாம்; சிலர் தாழம் பூவைச் சடை தைத்துக்கொள்ள விரும்பலாம்; மற்றுஞ் சிலர் வில்லிப் பூக்களை அடுக்காய்த் தொடுத்து அணியலாம்; வேறு சிலர் *செத்த குரங்கைத் தலைமேற்சூடி உகக்கலாம். நாகரிக நாரீ மணிகள் உங்களைத் தலைமேல் 'அரி' 'அரி'யாய்ச் சுமந்து உவகையடையலாம். இதெல்லாம் அவரவர் விருப்பம். இதனாலே மல்லிகையை அவர்கள் அறவே வெறுப்பதாகக் கொள்ளுவதோ? நீங்களுங்கூட இப்போது மெள்ள மெள்ள எங்களுடைய தொடர்பைப் பெறத்தானே விழைகின்றீர்கள்? இதிலிருந்தேனும் எங்கள் மதிப்பு விளங்கவில்லையா?" என்று இடித்துரைத்தது. கனகாம்பரம் தலை குனிந்து, வாளாநின்றது.

மல்லிகையும் கனகாம்பரமும் இவ்வாறு உரையாடியதெல்லாம் மறைவில் கேட்ட மங்கையர் மகிழ்ச்சியுடன் மேற்சென்று தாங்களன்போடும் வளர்த்த மல்லிகைக் கொடியைப் பார்த்துவிட்டு மாளிகைக்குத் திரும்பினர். மாளிகையை

* செத்த குரங்கு என்பது சாமந்தி.

அடைந்ததும், மோஹனா "தங்காய்! மணமில்லாத பூ என் மனதிற்கு பிடிக்கவில்லை. இனி, மல்லிகையே நான் உகந்து சூடுவேன்" என்றாள். "ஆம் அக்காள்! காகிதப் பூ போன்ற கனகாம்பரத்தை அணிவதில் எனக்குக்கூட விருப்பமில்லை. அது உள்ளே சென்றாலும் உயிரே போய்விடுமாம்" என்றாள் சுலோசனா.

மலைபுத்தொடர்கள்

"பண்புளோர்க்கொரு பறவை பாபத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா னாற்காலி"

(பறவை - ஈ (கொடு). இலக்கம் - அஞ்சு (அச்சங்கொள்). நாற்காலி - விலங்கு.)

சென்னிமலை வேலவர்க்குச்
சேர்ந்த கொம்பு இரண்டு முண்டு
கன்னிகுற வள்ளியர்க்குக் கையில்லை
ஆட்டுக்குக் கொம்பில்லை ஆனைக்குக் காலில்லை
பாட்டுக்குள் ளாராய்ந்து பார்.

(கொம்பிரண்டு - "ெ" "ே" (சேன்னிமலை வேலவன்). கன்னி என்பதில் கன்னிகை என்பதற்குரிய "கை" இல்லை. ஆடு என்பதில் "ே" கொம்பில்லை. ஆனை என்பதில் "ா" காலில்லை.)

407



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது

(௩௩௭-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாஞ் சூத்திரம்

மேலே நான்காஞ் சூத்திரத்தில் உயிரினிலக்கணங் கூறு முகத்தான் சகசமலமாகிய ஆணவமலத்தாற் கட்டுண்டு உணராதிருக்கும் உயிரினுடைய கேவலாவத்தையினியல்பை விளக்கிக் கூறிய ஆசிரியர் அடுத்த ஐந்தாஞ் சூத்திரத்தில் சகலாவத்தையினியல்புபற்றி உயிருக்கு முதல்வனுணர்த்தும் முறைமை கூறுகின்றார். இங்ஙனம் நான்காஞ் சூத்திரத்திற்கும் ஐந்தாஞ் சூத்திரத்திற்குங் கூறப்பட்ட முறைமை பற்றிய இயைபினால் சூத்திர இயைபு விளங்கும். சூத்திர இயைபு, பாத இயைபு என்றுங் கூறப்படும்.

2. பிரமாண இயல் முதலாவது சூத்திரத்தில் உலகிற்கு நிமித்த காரணமாகிய பதியினது உண்மை கூறிய ஆசிரியர், அடுத்த இரண்டாஞ் சூத்திரத்தில் அப்பதி ஐந்தொழில் செய்தற்கண் இன்றியமையாது வேண்டப்படுவதாய் எஞ்சி நின்ற முதற்காரணம் துணைக்காரணங்களினது உண்மை கூறியவாறே, இலக்கண இயல் நான்காஞ் சூத்திரத்தில் உயிரினிலக்கணங் கூறிய ஆசிரியர் அடுத்த ஐந்தாஞ் சூத்திரத்தில் உயிரினது இலக்கணமாகிய அறிவு விளங்குதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாய் எஞ்சி நின்ற முதல்வனது அருட்சத்தியாகிய திரோதான சத்தியினிலக்கணங் கூறுகின்றார். மாயையும் கன்மமும் திரோதான சத்திக்குக் கருவிகளாயிருத்தலின் அதனுள் அடங்கும். இதனால் பாசஇலக்கணங் கூறப்பட்டவாறாயிற்று. இங்ஙனம் அவாய்நிலைபற்றிய இயைபினால் இயல்இயைபு விளங்கும். இயல்இயைபு, ஓத்தியைபு என்றுங் கூறப்படும்.

3. ஆசிரியர் நான்காஞ் சூத்திரம் மூன்றும் அதிகரணத்தில் உயிர் கருவிகளோடுகூடி அஞ்சவத்தைப்பட்டு வினைப்பயன் நுகரும் என்று கூறினர். அவ்வாறு உயிர் வினைப்பயன் நுகர்தற்கு முதல்வனது உதவி வேண்டப்படுமோ வேண்டப்படாதோ என்னும் ஆசங்கை (ஐயம்) நிகழ்கின்றது. ஆசிரியர் அவ்வாசங்கையை நீக்கி ஐந்தாம் சூத்திரம் முதல் அதிகரணம் இரண்டாம் அதிகரணங்களில் வினைப்பயன் நுகரும் உயிர்க்கு முதல்வனது உதவி இன்றியமையாது வேண்டப்படும் என்று கூறுகின்றார். முதல் அதிகரணம், இரண்டாவது அதிகரணப்பொருளை விளக்கும் உவமையாய் அதனுள் அடங்கி நிற்றலால் இரண்டு அதிகரணங்களும் சேர்ந்து கூறப்பட்டன. இங்ஙனம் ஆசங்கைபற்றி ஆசிரியர் கூறும் இயைபான் அதிகரண இயைபு நன்கு புலனாம்.

4. இச்சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது. அவை பின்முறைமையிற் கூறப்படும்.

முதல் அதிகரணம்

5. "ஈண்டு ஐயுணர்வுகள் ஆண்மாவாலுணரும்" என்பது முதல் அதிகரணத்தின் மேற்கோள்:—ஈண்டு என்பது இம்முதல் அதிகரணத்தில். ஐ உணர்வுகள் என்பது இங்கே உணர்வுகளுக்கு ஏதுவாயுள்ள செவி, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐம்பொறிகளைக் குறிக்கிறது. உணரும் என்பது சத்தபரிச உருவரச கந்தங்களாகிய விடயங்களைக் குறிக்கிறது. ஆகவே முதலாவது உலகவிடயங்களை அறிதற்குக் கருவிகளாயமைந்துள்ள செவி, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐம்பொறிகளும் உயிரினல் விடயங்களை அறியும் என்பது மேற்கோளின்பொருள் ஆகும். ஐம்பொறிகளும்உயிரினல் அதிட்டிக்கப்பட்டு விடயங்களை யறியுமேயன்றித் தாமாகஅறியமாட்டா; அங்ஙனம் விடயங்களை அறிகின்ற தம்மையும் அறியமாட்டா—இங்கே ஐ உணர்வுகள் என்றதனல் இனம்பற்றிப் பிறகருவிகளும் கொள்ளப்படும்.

6. பற்றுஅற்ற புருடன் சந்நிதியில் புத்திதத்துவமானது விடயங்களை அறியுமன்றிப் புருடன் ஐம்பொறிகள் முதலிய கருவிகளோடு சேர்ந்து விடயங்களை அறியவேண்டுவதில்லை என்று கூறும் சாங்கியர் கொள்கையை மறுத்தற்கு எழுந்தது இம்முதல் அதிகரணம்—ஆசிரியர், சாங்கியர் கொள்கையை மறுத்துக் கூறும் மறுப்புரையானது மேலே நான்காவது சூத்திரம் 45-வது பந்தியில் விரிவாய்க் கூறப்பட்டிருத்தலால்

ஆண்டுக்காண்க (பால் 6 பக்கம் 266 பார்க்க)—முதல் அதிகரணமானது சாங்கியர் கொள்கையை மறுத்து ஐம்பொறிகள் முதலியன ஆன்மாவாலுணரும் என்ற சைவசித்தாந்தக் கொள்கையை நிலைநாட்டுதலுடன் இரண்டாவது அதிகரணப் பொருளுக்கு உவமையாக அமைந்து அதனை விளக்குவதாயுமுள்ளது.

7. ஆசிரியர் தாம்கூறிய மேற்கோளை ஒரேதுவினால் வலியுறுத்துகின்றார்—"அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவையொன்றையும் விடயியா ஆகலான்" என்பது அவ்வேது. அவற்றினான் என்பது செவி, மெய், கண், வாய், மூக்கு என்ற ஐந்துபொறிகளோடு.—உயிரானது ஐம்பொறிகள் முதலியவற்றோடு கூடி அதுவதுவாய் ஒன்றுபட்டுக்காணினல்லது யாதொரு உலகவிடயத்தையும் அறிந்து விடயிக்கமாட்டாது என்பது ஏதுவினாற் போந்தபொருள். அரசனொருவன் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்து அரசியற்றொழில் செய்யும் அமைச்சர் முதலாயினோரை அவரவர்க்குரியதொழிலைச் செய்யும்படி ஏவித் தன் ஆணையைச்செலுத்தி அரசகாரியம் செய்தல் போல, புருடன் சாக்கிரத்தில் புருவநடுவில் நின்று ஐம்பொறிகள் முதலிய கருவிகளை ஆண்டு அந்தஅந்தக் கருவிக்குரிய விடயங்களை விடயிக்கும்படி ஏவித் தன் ஆணையைச்செலுத்தி அவற்றால் விடயங்களை யறிந்து நுகர்கின்றது. அமைச்சர் முதலிய அதிகாரிகள் அரசன் ஆணையை மீறிச்செல்லாததுபோல ஐம்பொறிகள் முதலிய கருவிகளும் புருடன் ஆணையைக் கடந்துசெல்லா.

8. ஒருவர் தன்கண்முன், பழகின நண்பர் ஒருவர் வந்து நின்றாலும் அந்நேரத்தில் தம்முடைய அந்தக்கரணங்கள் யாதாமொரு விடயத்தை நினைத்து நிச்சயித்தற்கண் ஈடுபட்டிருப்பின், தம் நண்பர் நின்று கொண்டிருத்தலை அறியமாட்டார். இது உலக அநுபவத்தில் நாம் காண்கிற உண்மை. இங்கே கண்முன்னே நண்பர் நின்றாலும் கண் உயிரோடொற்றித்து நின்று காணவில்லை யாதலின் நண்பர் உருவம் கண்ணுக்குத் தெரியவில்லை—ஆசிரியர் இந்த அநுபவ உண்மையை ஏதுவாகக் காட்டி முதல் அதிகரணப்பொருளை வலியுறுத்துதலை அறிக.

9. ஐம்பொறிகள் ஆன்மாவின் சந்நிதியில் புத்திதத்துவத்தினால் விடயங்களை அறியும் என்று சாங்கியர் கூறும் கொள்கையினும் ஆன்மாவின் சந்நிதி இன்றியமையாமை கூறப்படுகின்றது. அங்ஙனமாயின் ஆன்மாவின் சந்நிதி என்

பதற்குச் சாங்கியர் சைவசித்தாந்தம் கூறுகிறபடி ஆன்மா ஐம்பொறி முதலியவற்றோடு ஒற்றித்து நின்று சங்கற்பித்துக் காணுதல் என்று பொருள் கொள்ளாமல் காந்தத்தின் முன் இரும்புபோல அபிமுகம் என்று மாத்திரம் பொருள் கொள்ளுதலால் கருத்து வேறுபடுகின்றனர்—“மன்னு சிவன் சந்நிதி” என்ற இரண்டாவது அதிகரணவெண்பாப்பாட்டில் வருகிற “சந்நிதி” என்ற சொல்லுக்குச் சிவஞான சுவாமிகள் “சிவசத்தி அவ்வக்காரியங்களில் உன்முகமாதலாகிய சங்கற்பமேயன்றி அவிகாரவாதிகள் கூறும் அபிமுகம் மாத்திரை அன்று” என்று கூறுதல் காண்க.

10. ஐம்பொறிகள் உயிரையின்றி விடயங்களையறியாதிருத்தல்போல உயிரும் ஐம்பொறிகளையின்றி விடயங்களை அறியா—இவ்வுண்மை உயிரானது ஐம்பொறிகள் நீங்கிய கனவுநிலையில் விடயப்பொருள்களைத் தூலமாய்க் காணாது நிற்றலால் நாம் அறியலாம். ஆனால் உயிர் விடயத்தையறிதற்கு ஐம்பொறிகள் முதலியன இன்றியமையாதிருத்தல் அதன் கட்டு நிலையில் மாத்திரமேயன்றி வீட்டுநிலையிலில்லை என்பதறிக.

“F” (எஃப்) என்னும் எழுத்து எபிரேய மொழியிற் கிடையாது.

* * *

மீன் என்பது பெண்பாலுக்குரிய சின்னம். அதனாலேயே அஃது எப்பொழுதும் சத்திவடிவமாகிய இறைவியுடன் தொடர்பு படுத்தப்படுகிறது.

* * *

பேய்பிசாசு முதலியவற்றிற்கு அஞ்சுந்தன்மை சில மக்களிடமட்டுமன்று; நாய்கள், கரடிகள், புலிகள் முதலிய விலங்குகளிடமும் காணப்படுவதாகும். இடியோசை கேட்ட எல்லா விலங்குகளும் நடுக்க முறுகின்றன. உடையேதுமில்லாத ஒரு திருடனைக்கண்ட நாய் குலைப்பதில்லை. ஒரு சங்கிலியை எடுத்து ஒரு குதிரையின் அருகில் ஆட்டி ஓசையுண்டாக்கினால் அது மிகவும் மருட்சி கொள்ளும்.

புதுக் கவிகள்-Original Poetry

தமிழ் அருமை வெளிப்படுத்தல்

[திரு. பெ. கோவிந்தன் அவர்கள், கொடுமுடி.]

அஞ்சிறைய மடவண்டே அழகியசெந் தமிழ்மணம்போல்
நெஞ்சினுக்கும் நாவினுக்கும் நிமிர்செவிக்கும் மூக்கினுக்கும்
எஞ்சுதலி லாதுமணம் ஈயவல்ல மலமணர்மொன்
றஞ்சுநிலத் தறுகாலோ டலையும்நீ அறிவாயோ 1.

தண்டலையம் வண்டினமே சாருமையம் உண்டினமே
கண்டாலும் உரைத்தாலும் காதாலே கேட்டாலும்
உண்டாலும் தித்திக்கும் ஒண்டமிழ்த்தேன் போலொருதேன்
கண்டீரோ கண்ணாலே காதாலும் கேட்டீரோ 2.

மன்றலிளந் தென்றால்நீ வந்தெமக்கு நல்குமணம்
குன்றிலுள்ள அகில்மணமோ குளிர்நெய்தற் பூமணமோ
துன்றுபொழிற் கனிமணமோ தொன்னகர்ப்பெண் குழல்மணமோ
ஒன்றியியைந் தடைமணமோ ஒண்டமிழின் தொடைமணமோ

பூந்தொடையின் தேனுண்ணும் பொறிவண்டே இனிப்பன்றித்
தீந்தமிழின் தொடையிலெங்கும் திகழ்கின்ற எண்சுவையும்
மாந்திமகிழ் வுறவுனக்கு வழியுண்டோ நிறமுருவம்
ஆய்ந்தறித லன்றிப்பத் தழகறிய வல்லுனையோ 4.

மயிலேநீ ஆடுகின்றாய் வண்டேநீ ஊதுகின்றாய்
குயிலேநீ பாடுகின்றாய் கொண்மூநீ கொட்டுகின்றாய்
மயலேய்ந்த கொன்றாய்பொன் வழங்குகின்றாய் தமிழ்நடிப்பை
அயலேவந் தறிவித்தோர் ஆரென்று கூறுவீரோ 5.

காட்டிஞுறை பைங்கிளியே கன்னிச்செந் தமிழ்த்தாயை
வேட்டணையின் சிலம்புமணி மேகலையா ரொடுபத்துப்
பாட்டறிவாய் பொருளறிவாய் பலதொகைமுப் பால்பெறுவாய்
கேட்டுவக்கும் திருப்புகழும் கிடைக்கும் நினைப் புனக்குண்டோ

இன்றமிழ்ப்பண் பலபாடும் இளம்பூவாய் நாற்புறமும்
வென்றிசைகொண் டுயிர்வாழ விருப்புண்டோ வெல்லுவையால்
தென்றமிழ்ச்சொல் லென்றுரைக்கத் தெரிந்தாரு மில்லைஅவர்
என்றுமுயன் றாலும்அதை எழுதஎழுத் தும்மில்லை 7.

அலைகின்ற இளங்காற்றே அறிவையுல கத்தணையும்
இலையென்று தெந்நாளும் ஈவோர்கள் வாழ்நாடு
கலைதெரிந்தோர் வாழ்நாடு கற்புடையோர் வாழ்நாடு
தலைமையறம் வாழ்நாடு தமிழ்நாடோ பிறநாடோ. 8.

ஆழ்கடலின் வாழ்முதலாய் அன்பின்றி நின்னோடு
வாழ்மீனைக் கொன்றுண்பாய் வள்ளுவர்செல் வழிச்சென்று
மூழ்கிச்செந் தமிழ்க்கடலில் முப்பாலுண் டெப்பாலும்
தாழ்வாகும் கொலைவிடுத்தோம் தமிழ்க்கடற்கன் றேவுயர்வு. 9.

இருநாட்டுக் கிடைநின்றே எப்புறமும் காண்கின்ற
கருங்கோட்டு வேங்கடமே களங்கமனத் தாரியப்பெண்
பெருங்காட்டைச் சென்றடையப் பேசுந்தோ றெமக்கினித்து
மருளோட்டுந் தமிழ்க்கன்னி வாழும்வகை யறிவாயோ. 10.

வரலாற்றுப் பகுதி History & Biography

தெலுங்குமொழிப் புலவர் பெருமக்கள்

[கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்]

ஆந்திரம் எனப்படும் தெலுங்குமொழி நூல்களுள், அம்மொழியில்வல்ல புலவர் பெருமக்கள் வரலாறுகள் காணப் படுவபோல், பிறமொழிகளில் வரலாறுகள் காணப்படுவ தில்லை. ஆந்திர அரசர்களும், பிற பிரபுக்களும் தெலுங்கு மொழியில் மிக்குயர்ந்து புலமைக்கு அரசராக விளங்கிய கவிவாணர்களையும், அவர்கள் இயற்றிய அரும்பெரும் நூல் களையும் அன்புடன் வரவேற்று, பெரும்பொருளுதவிப் பெரி தும் பேணி வந்தார்கள். இவற்றால் அம்மொழி வளர்ச்சி பெற்று ஆந்திர நாடனைத்திலும் தெலுங்கு மொழிப் புலவர் கள் பெருக்கமடைந்து பெயர் சிறந்து விளங்கலாயினர். இங்ஙனம் பெருக்கமடைந்த புலவர்களுள் முதன்மையாக வைத்தெண்ணக்கூடிய தகுதியும், புலமை ஆற்றலும் வாய்ந்த புலவர் பெருமக்கள் சிலர் விளங்கிப் பெயர் சிறந்திருந்தனர். அவர்கள், வால்மீகி முனிவரது வடமொழி இராமகாதையைத் தெலுங்குமொழியில் இயற்றிய 'பாஸ்கரன்,' சமஸ்கிருத வியாசபாரதத்தை ஆந்திரபாஷையில் செய்த 'திக்கன்ன சோமயாஜி'; மார்க்கண்டேய புராணத்தைத் தெலுங்கிலாக்கிய மாரன்னகவி'; 'பிரதாப ருத்ரீயம்' என்ற அலங்கார நூலை, உலகம் உள்ளளவும் நிலைபெறும்படி பாடியருளிய 'வித்யா நாதன்,' நீதிகள் நிரம்பிய வேமன்ன பத்தியத்தை இயற்றிய 'வேமனகவி;' 'பத்தேன்னகவி;' விடலராசன்,' 'கோளபுத்தா ரெட்டி;' 'திம்மரசு' முதலிய புலவர் திலகர்களாம். இவ் வரும்பெருங் கவிவாணர்கள், அரசர்களாலும், அறிவுடை யோர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்றுப் பொன்னு பரணங்களும், பொற்றுகிலும், வெண்பட்டுச் சால்வைகளும் பரிசுகளாகப் பெற்றிருந்தனர். இங்ஙனம் மதிப்புக்கும், புகழுக்கும் உரியராக விளங்கிய கவிவாணர்களின் கவிகளையும் பிரபந்தங்களையும், ஓதியும், உணர்ந்தும், குணதோஷங்களை ஆராய்ந்தும் கூறக்கூடிய அறிவுமிக்க ஆந்திரப்பிரபுக்களும், அரசர்களும் ஆந்திர நாட்டிலிருந்ததாக அறியப்படுகிறது. இங்ஙனம் செல்வர்களும் அரசர்களும், புலவர்களைப் போலவே இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றுக் கவிபாடவும், பிரபந்தங்கள் புனையவும், காவியங்கள் இயற்றவும்

ஆற்றல் பெற்றிருந்தார்களென்றால், அந்நாட்டினரது மொழிப் பற்று எவ்வளவு உயர்வு பெற்றிருக்கவேண்டுமென யூகித்துக் கொள்ளலாம். இம்முயற்சியினால் ஆந்திரமொழி மிகவும் முன்னேற்றமடைந்து ஆந்திரநாடனைத்தும் மிகுதியாகப் பரவி வியாபகம் பெற்றுக் கீர்த்திசிறந்து விளங்கியது. ஆந்திர அரசர்களும், புலமை சிறந்து திகழ்ந்தார்களென்பதற்கு விஜயநகர வேந்தன் ஸ்ரீ கிருஷ்ணதேவராயனும், நிஜாம் ராஜ்யத்திலுள்ள 'ஓரங்கல்' (வாரங்கல்) இரண்டாம் பிரபுட தேவராயனும், அவர்களியற்றிய "ஆமுக்த மால்யம்' 'பிரதாப ருத்ரீயம்" என்ற நூல்களுமே சிறந்த சான்றுகளாம்.

அன்றியும், ஆந்திரநாட்டரசர்களும், செல்வர்களும் தெலுங்கு மொழிவாணர்களைப் பெரிதும் பேணியும், ஆதரித்தும்; அவர்கள் அருமையாகவியற்றிய பிரபந்தங்களுக்குப் பாட்டுடைத்தலைவர்களாவும் இருந்ததனால், ஆந்திரப்புலவர்கள் பெயர் சிறந்து, கீர்த்தியையும் நிலைநாட்டினார்கள். அப்புலவர்கள் சிலருடைய வரலாறுகளைச் சுருக்கமாகத் தருகின்றோம்:

1. நன்னய சோழகவி

இவர், தெலுங்கு மொழிப்புலவர்களுள், முதன்மையாக வைத்தெண்ணக்கூடிய பெருமை சிறந்தவர். இப்பெரியார் வடமொழிப் பயிற்சியிலும் வல்லாராய்ப் பெரும்புலவரெனப் பெயர்சிறந்தும் விளங்கினர். இப்பெருமான், சோழநாட்டுத் திரிசிரபுரத்துள்ள உறையூரை இராசமாநகரமாகக் கொண்டு அதனையும்; கோதாவரி நதிக்கரைப் பிரதேசங்களையும்; சிங்கள மத்தியபூமியிலுள்ள நாடுகளையும் அரசு செய்து வந்த சோழ மன்னர்களின் வமிசத்தைச் சார்ந்தவர். மிகவும் பிரசித்தி பெற்றவர். இப்புலவருடைய தந்தை 'சோழவல்லி பாகநாடு' என்ற ஊருக்குத் தலைவராக விளங்கியிருந்தார். நம் நன்னய கவிவாணர் வாழ்ந்திருந்த காலம் கி. பி. 1650 என்று மானபல்லி ஸ்ரீ இராமகிருஷ்ணகவி கூறுகின்றனர். "ஆந்திரப் புலவர்கள் வரலாறு" என்ற நூலை எழுதிய ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு அவர்கள், நன்னய்யருடைய காலம், கி. பி. 1153-ஆம் ஆண்டென்று தமது நூலில் விளக்கியிருக்கின்றனர். நன்னய கவியின் காலம்பற்றி மானபல்லி இராமகிருஷ்ண கவிக்கும், ஸ்ரீவீரேசலிங்கம் பந்துலுக்கும் பத்திரிகைகளில் வாதப்பிரதிவாதம் நிகழ்ந்து வந்தன. இந்நன்னய சோழகவி சிவத்தொடர்புடைய சைவசமயத்தில் பெரும்பற்றும், சிவபெருமானிடத்தில் பெருகிய அன்பும் வாய்ந்தவர். இவ்வுண்மை இப்புலவர் இயற்றிய "குமார சம்பவம்" என்ற நூலினால்

415

விளக்கமாம். இவ்வரிய நூல், பிறமொழிகளில் சிறந்ததாக மதிக்கப்பட்டுக் கொண்டாடப்படுகின்ற உயர்ந்த காவியங் கட்கு எவ்வகையிலும் தாழ்ந்ததன்று. குமார சம்பவ காவியத் தின் உயர்வைப்பற்றி, தேகுமல்லி ஸ்ரீ ராஜகோபால ராவ் அவர்கள் சென்னைக் கிறிஸ்துவ கலாசாலை மாதப்பத்திரிகை ஒன்றில் அடியில் வருமாறு எழுதியிருக்கின்றனர்:—

"Kumarasambavamu is the Paradise Lost of the Telugu Language; only the theme is set in an oriental atmosphere under oriental conditions"

இயற்கையையும், அதன் பேரழகையும் உண்மையாகவே அறிந்து, திறமையாக வருணிக்கும் பேராற்றலுடைய ஆங்கில மகாகவி "வோர்ட்ஸ்வர்த்" தைப் போலவே, ஆந்திர மொழி யில் மிகத்தேர்ந்து பெரும் புலவராகப் பெயர்சிறந்த நன் னய கவியும், ஆந்திர மொழியில் இயற்கையை நன்ருகவும், அழகாகவும் வருணித்து அதன் ஒப்பற்ற சௌந்தர்யத்தை வியந்து அற்புதமான கற்பனைகளால் கவி புனைந்து பாடி யிருக்கின்றனர். இக்கவிராயரவர்களது புலமையையும், புத்தமுதமனைய கவிகளையும் புலமையறிவு பெற்றவர்கள் சுவைத்து, "இது அற்புத விவேக சம்பத்துடையது; சுவை யமுதம் நிரம்பியது" என்று மனமாரப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். இதனுல், நன்னய கவியி னுடைய பேரறிவும், பெரும்புலமையும் எத்துணை உயர் வுடைத்தென விளக்கமாகின்றது. உதாரணத்திற்குக் குமார சம்பவத்திலிருந்து சிலபகுதிகளைக் காட்டுகின்ருேம்.

I. குமாரசம்பவத்தின் நான்காம் அதிகாரத்தில் சிவ பெருமானுடைய விரதத்தைப் பங்கம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் மன்மதன் தோன்றியதை விளக்கும் சந்தர்ப் பத்தில் நன்னய கவியால் வருணிக்கப்பட்ட வசந்தருதுவின் சிறப்பு மிகவும் அற்புதமானது. தெலுங்குமொழி நூல்களில் காணப்படும் திவ்விய வருணனைகளில் இதுவே தலைசிறந்த தென்று கூறினும் மிகையாகாது. அல்லாமலும் வாசகர் களின் மனக்கண்களின் முன்னே இயற்கைக்கவர்ச்சி, புலவர் புனைவாற்றல் ஆகியவைகளைத் தோற்றுவித்து நிகரற்ற தெனக்கூறும்படி செய்வதில் இப்புலவர் பிரானுக்குச் சமானமான புலவர்களும் உளரோ! என்ற ஐயத்தையும் கொள்ளச் செய்கிறது. ஆதிகவியாகிய வால்மீகி முனிவர் ஒருவர்மட்டும் மேற்குறித்த வருணனைகளில் நன்னய கவி யவர்களுடன் போட்டியிடத் தகுதியுடையவராவர். பிற

மொழிப்புலவர்கள் கூட பிரகிருதியின் சாரமான கவிதையின் சிருஷ்டியைக் கற்பித்தனரே யன்றி, இக்கவியைப்போல் கற்பனை வாயிலாக நூற்றுக் கணக்கான உருவங்களை வாசகர்களின் உள்ளக் காட்சியில் இடைவிடாமல் உண்மைக் கவியின் மகிமையைக்கொண்டு சிருஷ்டித்து, "பயாஸ் கோப்" சித்திரங்களைப்போல் தோன்றச் செய்தாரில்லை. ஆனதால், இவ்வகையிலிவரைவிடச் சிறந்த புலவரைக் காணமுடியாது. மேலும், குமாரசம்பவத்தில் சில பாகங்களை வாசிக்கும்போது கவியின் மனோபாவம், வானளாவிய மலைச்சிகரத்தைப்போல் உயர்ந்து காண்கின்றது. இயற்கையழகின் மென்மையும், உயரிய தன்மையும் படிப்போர் உள்ளத்தில் பதிந்து வியக்கும்படி அவ்வளவு மேலானமுறையில் தமது கற்பனை சக்தியைக் கொண்டுவருணித்திருப்பது கவியின் திறமைக்கும், உயர்ந்த புலமைக்கும் எடுத்துக் காட்டுக்களாம். இவ்வகைச் சாமர்த்தியங்களில் சில ஆந்திரக் கவிராயர்கள், தெலுங்கு மொழியில் சிலகவிகளை இயற்றியுள்ளா ரெனினும், அவை நன்னய கவியின் வருணனைகளுக்குமுன்னே தலையெடுக்கமாட்டாமல் வெட்கித் தாழ்ந்து போகின்றன.

II. கவிதா சிருஷ்டியில் தான் இவ்வாறெனில், எண்ணத்தின் உயர்விலும், நன்னய மகாகவியை வெல்லவல்ல ஆந்திரக் கவிகள் யாருமேயில்லையென்று உறுதியாகக் கூறலாம். பிரகிருதியினால் ஒன்றுபட்ட எண்ணத்தின் உயர்வினால் கற்பிக்கப்பட்ட கதாபாகத்தில், சிவபெருமானைக் கணவனாகப் பெறுவதற்கு மலையரசன் மகளாகிய அம்பிகை தபசு செய்வதற்கு வனத்தை நோக்கிச் செல்லும் பகுதி, இனிமையும், மனோகரமும் சிறந்து காண்கின்றது. இந்தக் கட்டத்தை வாசிக்கின்ற அன்பர்களது மனம், சுவை மலிவு, சொற்சாதுரியம், பொருள் வனப்பு, வாக்கியாலங்காரம் ஆதிய சிறப்புக்களால் வியப்புற்றுப் பெருகிய களிப்பினால் பூரித்து விடுகின்றது. இத்தகைய பூரிப்பினால் பேரானந்த வாரிதியில் ஆழச் செய்யும் பகுதிகள் குமாரசம்பவத்தில் மிகுதியாக வுள்ளன.

ஏற்ற சொற்களையும், தொடர்களையும், கற்பனைகளையும் தங் கவிகளில் பெய்து பாடுவதில் கவிராயரவர்களுக்கிருந்த இத்தகைய சக்தியைத் தெரிந்துதான் ஆந்திர அரசன் நன்னய மகாகவிக்கு, "கவிராஜ சிகாமணி" என்ற விருதுப் பெயரை வழங்கினன் போலும். அங்ஙனமாயின், அவ்விருதுப் பெயர் இவர்க்குப் பெரிதும் தகுதியுடையதேயாம்.

திரு. கா. நமச்சிவாய முதலியார் வரலாற்றில் ஒருகுறிப்பு

[திரு. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்]

திங்களணி திருவால வாயெம் மண்ணல்
திருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ்நாளு நனி பெறுவர்......

என்னுந் திருவிளையாடற் செய்யுளிற்கு இலக்கியமாக விளங்கினர் காலஞ்சென்ற நமச்சிவாய முதலியார் என்பதனை அவர் வாழ்க்கைப் பகுதியிலிருந்து காட்டுவாம்.

இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்னர் முதலியாரைத் தமிழுலகம் அறியாது. முதன்முதல் அவரை அறிய நேர்ந்தது அவர் 1901-ம் ஆண்டில் வெளியிட்ட திருவிளையாடற் புராண வசன சஞ்சிகையாலேயாம். புராண மஞ்சரி என்னும் வரிசையில் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்த புராணம் முதலியவற்றையும் பாகவதம், இராமாயணம், பாரதம், முதலிய பத்திநூல்களை எளியவசன நடையில் எழுதிக் குறைந்த விலைக்குக் கொடுக்கக்கருதி 32 பக்கம் "பாக்கெட்" (Pocket) (அளவில்) வாரசஞ்சிகை யொன்று காலணு வீதம் வெளியிட்டுவந்தனர். முதலில் திருவிளையாடற் புராணவசனம் ஆரம்பிக்கப்பட்டு அதில் 35 சஞ்சிகைகள் விரைவில் வெளிவந்து நின்றது. அப்போது முதலியார் பிடாரியார் கோவில் தெருவில் 12-வது இல்லத்தில் வசித்து வந்தனர். பிறகு யாது காரணத்தாலோ புராணமஞ்சரி வரிசை கைநெகிழவிடப்பட்டது. மஞ்சரி வெளிவந்ததன் பின்னர்த்தான் முதலியார் பள்ளிப்புத்தகங்கள் எழுதத் தொடங்கியதும் விவாகம் செய்துகொண்டதும், செல்வம், அதிகாரம் கௌரவம் முதலியவற்றால் சிறப்புற்று விளங்கியதுமாகும். இவற்றால் முதலியாரை ஊக்கிவிட்டது திருவிளையாடற் புராணமென்பது வெளியாகின்றது. அவர் அப்புராணத்தை முழுவதும் வெளியிட்டிருந்திருப்பாராகில் இன்னும் மேம்பாடுற்று விளங்கியிருப்பார் என்பது கூறாமலே விளங்கும்.

சிலப்பதிகாரம்: அரங்கேற்று காதை

(3-வது பிரசங்கம்)

[திரு. சுவாமி விபுலாநந்தர்]

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை என்பதுபற்றி தமது 3-வது பிரசங்கத்தில் சுவாமி விபுலானந்தா பேசினார்கள். அப் பிரசங்கத்தில் அவர் குறிப்பிட்டதாவது:—

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை மாதவி என்ற நாட்டியப்பெண் அரங்கேறியதுபற்றியும், கி. பி. ஆரம்ப நூற்றாண்டுகளிலே தமிழரது நாகரிகம் எவ்வாறிருந்த தென்பதைப்பற்றியும் விபரமாகக் கூறுகிறது. '1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர் நிலை' என்ற தலைப்புடன் கனகசபை பிள்ளை வெளியிட்ட நூலிலிருந்து ஒரு பாகத்தை வாசித்துக்காட்ட விரும்புகின்றேன். 'சமூக வாழ்க்கை' என்ற அத்தியாயத்திலே அந்தத் தமிழறிஞர் கூறுவதாவது:—அக்காலத்தில் நடிகச் சிறுமி 5-வது பிராயத்தில் கல்விகற்க ஆரம்பிப்பாள்; 3 வருஷகாலம்தொடர்ச்சியாகக் கல்வி கற்பாள். அச்சிறுமியின் கல்வி தற்காலத்தில் பூரண கலையுணர்ச்சியுள்ள மாதரின் படிப்புக்குக் குறைவானதல்ல. அவளுக்கு ஆடவும், பாடவும், வசீகரத்துடனிருக்கவும் கற்றுக் கொடுத்தனர். யாழ், குழல், மத்தளம் இவை வாசிக்கவும், அயல்நாட்டு பாஷைகளில் இயற்றிய பாடல்களைப்பாடவும், சித்திரம் எழுதவும், உல்லாசமாக நீராடவும், நல்ல நிறமுள்ள மாவுகளை (பவுடரை)ப் பூசிக்கொள்ளவும், அழகிய மாலைகள் தொடுக்கவும், நகைகளால் தன்னைத்தானே அலங்கரித்துக் கொள்ளவும், படுக்கையை அழகாகப் போடவும், பருவகாலங்களைக் கவனிப்பதோடு அந்தந்த பருவத்திற்கு பொருத்தமானது எதுவென்பதை அறிந்துகொள்ளவும், பதவித கலைகளின் முக்கிய விஷயங்களைப்பற்றி விவாதிக்கவும், மற்றவர்களது எண்ணங்களைத் தெரிந்து கொள்ளவும் கற்றுக்கொடுத்தனர் ஆடவரது மனதை வசீகரப்படுத்துவதற்கானதும் அவர்களுக்குச் சந்தோஷமுண்டு பண்ணுவதற்கானதுமான ஒவ்வொரு விஷயத்தையும் அவள் கற்றுக்கொண்டாள். 12-வது வயதில் அவள் மன்னர் முன்பும், பிரபுக்கள் முன்பும் அரங்கேறுவாள். அவ்ளுடன் ஒரு கவிஞனும், ஒரு இசையாசிரியனும், யாழ் வாசிப்பவன் ஒருவனும், குழல் வாசிப்பவனொருவனும் மத்தளக்காரன் ஒருவனும் இருப்பார்கள். அரங்கமானது இரண்டடி

உயரம், 14அடி அகலமும், 16 அடி நீளமுள்ள மேடையைப் போன்றிருக்கும். தூண்களின் மேல் மேடைக்கு மேல் 8 அடி உயரத்தில் விமான மொன்று அமைப்பார்கள். அந்த விமானத்தின் மீது இஷ்ட தெய்வங்களின் படங்கள் இருக்கும். விமானத்தின் நாலா பக்கங்களிலும் திரைகள் விட்டிருப்பார்கள். இரவிலே அரங்கத்தை தீபாலங்காரம் செய்த பிறகே ஆடல் ஆரம்பமாகும். மேடையின் முன்பாகத்தில் 6 அடி அகலத்தை நடிகப்பெண்ணுக்காக ஒதுக்கியிருப்பார்கள். அவளுக்குப்பின் இரண்டு அல்லது மூன்று பழைய நடிகப் பெண்கள் நின்றவண்ணம் அவ்வப்போது சொல்லிக்கொடுப்பார்கள் அவர்களுக்குப் பின் இசைகாரர்கள் சிலரிருப்பார்கள். இவர்கள் இடையிடையே பாடுவார்கள். அப்போது நடிகச் சிறுமி ஓய்வு எடுத்துக்கொள்வாள். திரையைத் தூக்கியதும் மிக்க அலங்காரம் செய்து கொண்டிருக்கும் அச் சிறுமி தோத்திரம் செய்வாள். பிறகு பல பாடல்களைப் பாடுவாள், ஆடுவாள்; வசீகரத்துடன் அபிநயங்கள் செய்வாள். அவள் தனது யௌவனத்தாலும், அழகாலும் இனிய குரலாலும் வசீகரத் தோற்றத்தாலும் இசை வல்லமையாலும் சபையினரது உள்ளத்தைக் கொள்ளைகொள்வாள். அரசன் 1008 பொன்காசு விலையுள்ள பொன் மாலை யொன்று வெகுமதியாகக் கொடுப்பான். அதுவே பெரிய வெகுமானமாகும்.

ஒரு நாடகக் கணிகை அரங்கேறுவதற்கு அவசியமானவர்கள் வருமாறு:—

1. நாடகக் கணிகை
2. ஆடலாசிரியன்
3. இசையாசிரியன்
4. கவிஞன்
5. மத்தளக்காரன்
6. குழலோன்
7. யாழிசைப்போன்
8. அரங்கம்
9. அரங்கத்தின் மீது ஆடல்

அரங்கேறுவது சம்பந்தமாக சிலப்பதிகாரத்திலுள்ள செய்யுட்களில் பல விபரங்களைக் காணலாம். அரங்கேற்று காதையில் 70-வது வரி முதல் 94-வது வரிவரையில் யாழிசைப்

போனைக் குறிக்கின்றன. அந்த வரிகளுக்குப் பூரணமாக அர்த்தம் தெரிந்து கொண்டால் பண்டைத்தமிழ் இசையினர் பொக்கிஷத்திற்குத் திறவுகோல் கிடைத்துவிடும். 5 வருஷ காலத்திற்கு மேலாக நான் ஆராய்ச்சி செய்ததன் பலனாக சிறிது ஒளி கிடைத்துள்ளது. அந்த வரிகளுக்கு அடியாருக்கு நல்லார் வியாக்கியானம் எழுதவே இல்லை. அடியார்க்கு நல்லார் காலத்திலேயே பண்டைத் தமிழ் இசை புறக்கணிக்கப் பட்ட தென்று தெரிகிறது. மத்திய காலத்தில் கலை வல்லவர்களாக விருந்த ஜெயின சன்யாசிகளும், பௌத்த சன்யாசிகளும், ஆடல், பாடல் என்ற இருகலைகளையும் புறக்கணித்தனர்.

நாடகக் கணிகை அரங்கேறும் போது மகரயாழையே உபயோகித்தனள். இந்த யாழுக்கு 14 நரம்புகளிருந்த தோடு அந்தரக் கோல்களும் இருந்தன. இந்தயாழால் நி முதல் த வரையில் 14 ஸ்வரங்களில் மூன்று ஸ்தாயிகள் வாசிப்பார்கள். நி, ச, ரி, க, இந்த நான்கு ஸ்வரங்களும் கீழ் ஸ்தாயி; ம, ப, த, நி, ச, ரி, க, இந்த 7 ஸ்வரங்களும் மத்திம ஸ்தாயி; ம, ப, த, இவை மேல் ஸ்தாயி. புல்லாங் குழலையே முதலில் வாசிப்பார்கள்; பிறகு யாழ், மத்தளம் முதலியவற்றை வாசிப்பார்கள்.

ஏக காலத்தில் குழலால் கோடிப்பாலை வாசிக்க ஆரம்பிப்பார்கள்; யாழால் செம்பாலை வாசிப்பார்கள்.

பண்டைத் தமிழிசை உயிர் பெறவேண்டுமானால் புராதன கருவிகளும் தோன்ற வேண்டும்.

குரவை, வரிக் கூத்துகளைப்பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். குரவைக் கூத்து என்பது பலர் சேர்ந்து ஆடுவதாகும். வரிக் கூத்து ஒருவரே ஆடுவது.

குரவைப் பாட்டென்பது பலர் சேர்ந்து தெய்வ வழிபாடு செய்வது. வரிப்பாட்டு ஒருவரது கருத்துத் தோன்றப் பாடுவது.

(தொடரும்.)

—"விடுதலை."

421

செய்திகளும் குறிப்புகளும் :
News and Notes

"சைவசித்தாந்தம்" என்ற பொருள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியனுப்பிய திருமதி வயலெட் பரஞ்சோதி என்னும் இந்தியக் கிறித்தவ அம்மையாருக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் பிஎச். டி. என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்கள்.

* * *

"இந்திய வரலாறும் சிற்பமும்" என்ற துறையில் ஆராய்ச்சி செய்து வந்த திருமதி மீனாட்சி என்ற அம்மையாருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் பிஎச். டி. பட்டம் அளித்துள்ளார்கள்.

* * *

காலஞ்சென்ற திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இறுதி நாட்கடன் சென்ற மார்ச்சுத் திங்கள் 29-ம் நாள் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் பெரியதொரு கூட்டம் கூட்டப்பட்டது. திரு. சச்சிதாநந்தம் பிள்ளை, அலர்மேல்மங்கைத்தாயார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் முதலிய பல அறிஞர்கள் பாராட்டுரை பகர்ந்தார்கள்.

* * *

ஆந்திரப் பல்கலைக் கழக வைஸ் சான்ஸெலராக இருந்த புகழ்மிகு ஸர். எஸ். இராதாகிருஷ்ணன் என்பார் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த "கீழ் நாட்டு மதங்கள், நீதிகள்" என்ற துறையின் பேராசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகவும் பாராட்டற்குரியதாகும்.

422

மதிப்புரை

தஞ்சைவாணன் கோவை:—மூலமும் குன்றத்தூர் அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் உரையும் வித்துவான் ந. சுப்பைய பிள்ளை அவர்கள் ஆராய்ச்சிக் குறிப்புக்களும். இந்நூல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் 46-வது வெளியீடாகும். நம்மிடமும், யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை "இந்து சாதன" ஆபீஸிலுங் கிடைக்கும். விலை ரூ. 3-8-0; காலிக்கோ கட்டடம் ரூ. 4

அகப்பொருட்டுறைக்கு அருமணி விளக்காகிய செம்மைசால் இக்கோவை நூலுக்கு ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு கூடியதொரு விளக்கவுரை இல்லாமலிருந்தமை தமிழுக்கே ஒரு பெருங்குறையாகும். அக்குறையை மிகவும் முயன்று உழைத்து வியந்து பாராட்டத்தக்க வகையில் நிரப்பி வைத்த இயற்றமிழ்ப் போதாகாசிரியர் திரு. ந. சுப்பையா பிள்ளை அவர்களின் பேராற்றல் பாராட்டற்பாற்று. ஆண்டிற் சிறியராயினும் அறிவில் முதிர்ந்தவராகிய இப்பதிப்பாசிரியர் இன்னும் பற்பல இலக்கிய நூல்களை இவ்வாறே செம்மை செய்து திறம்படப் பதித்துதவுவார்கள் என நம்புகிறோம். பல பழைய எட்டுச் சுவடிகளைத் துருவியாராய்ந்து கண்ட வியத்தக்க குறிப்புக்கள் இந்நூலின்கண் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தருமபுர ஆதீன வித்துவசிகாமணி காழி. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள் இந்நூலுக்கு ஓரணிந்துரை பாடியுதவியுள்ளார்கள்.

* * *

கபிலர்:—சென்னைப் பல்கலைக் கழகத்து ஓரியண்டல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் தமிழ் இளஞ்சொற்பொழிவாளர் வித்வான் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதியது. சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் 5 வது வெளியீடு. விலை ரூ. 2

கீழ்நாட்டுமொழி யாராச்சிக் கழகம் ஒன்றை நிறுவியதன் பயனாக இத்தகையதொரு சிறந்த புதுமுறை ஆராய்ச்சி நூல் ஒன்று வெளிவந்தது புகழ்தற்குரித்தாகும். தமிழ் நூல்களில் தமிழ்ப் புலவர்களைக் குறித்த முறையான வரலாற்றாராய்ச்சி நூல்கள் மிகவுஞ் சிலவே இதுகாறும் வெளிவந்துள்ளன. அவற்றுள்ளும் "பரணர்" என்ற சீரிய ஆராய்ச்சி நூல் திரு. ரெட்டியாரவர்களின் அறிவுக் கொடையேயாகும். திரு. ரெட்டியார் அவர்கள் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய பலமொழிகளில் மிகவுந் தேர்ந்தவர்கள்; இலக்கணக் கடலின் கரைகாணும் பெற்றியர்கள். இப்பெரியார் தம் ஆராய்ச்சி நூலாக இப்பொழுது வெளிவந்துள்ள கபிலர் என்னும் இந்நூல் பல்லாற்றானும் தமிழாராய்ச்சிக்குக் கைகொடுத்துதவுவதாகும். ஆராய்ச்சி உணர்ச்சி மிக்குள்ள இந்நாளுக்கேற்ற நூல் இதுவாகும்.

பைந்தமிழ்ச்சோலை : சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது. சிங்கப்பூர் டாஙக்ரோட்டு 11-ம் எண் அன்பு நிலைய வெளியீடு. விலை அணா 4.

தமிழின் பெருமை, உயர்நிலை, பிறப்பு, வளர்ச்சி, வளமை, நூற் சிறப்பு ஆகிய பல பொருள்களை நெஞ்சு பிணிக்கத்தக்க வகையில் மொழிநயம் புலப்படுமாறு வரைந்துள்ள சுவாமி சுத்தாநந்த பாரதியாரின் தமிழ் அறிவும் பிறமொழி அறிவும் மட்டற்று வரையும் ஆற்றலும் தமிழ்நாட்டார் நன்கறிந்ததே. பல தாள்களில் எழுதப்பட்டு வந்த பல கட்டுரைகளை இவ்வாறு சீரிய முறையிற் கோவை செய்து குறைந்த விலைக்கு வெளியிட்டதேவும் அன்பு நிலயத்தார் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

* * *

சாயத்தொழில் மாணவன் : திரு. மே. சக்கரவர்த்தி நயினார் எழுதியது. அரசியலார் ஒப்புக்கொண்டது. குடிசைத் தொழில் வரிசை மலர். க. விலை அணா 4.

அழகிய இச் சிறுநூலின்கண் சாயம் உண்டு பண்ணும் முறைகளும், அவற்றை ஆடைகளுக்குத் தோய்க்குமுறையும் மிகவுந் தெளிவாக எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளன. பள்ளிமாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படுவதாகும். நாட்டுக் கைத்தொழில் சிறக்கப் பெரும்பாடுபட்டுவரும் இக்காலத்தில் இத்தகைய பயன்தரும் பலநூல்கள் வருவது இன்றியமையததாகும்.

* * *

திருவருணை யமக அந்தாதி: (முதற்பாகம்) சேலம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் கவிராஜ பண்டிதர் திம்மப்ப ஐயர் அவர்கள் இயற்றியது. விலை அணா ஒன்று. வகை தொகையற்ற சொற்சேர்புகளெல்லாம் செய்யுள்களாகவும் ஒண் புலமையாகவும் பாராட்டப்படும் இக்காலத்தில் உண்மைக்கவிப்புலமை யறிவிக்கும் வகையில் யமக அந்தாதி பாடிய ஆசிரியர் திம்மப்ப ஐயரவர்களைப் பாராட்டுகிறோம்.

* * *

நவீனம் : இஃது திங்கள்தோறும் வெளிவரும் ஒரு புதினப் பத்திரிகை. இதன் ஆசிரியர் திருக்குறள் அறத்துப்பாலுக்கு விருத்தியுரை யொன்றெழுதி மங்காப் புகழீட்டிய நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளையின் மகனார் திரு. குமாரசாமியாராகும். வேண்டுவோர் வி. எஸ். டி. சாமி அண்டு கோ வேப்பேரி, சென்னை என்ற முகவரிக்கு எழுதிக்கொள்ளவும்.

424

ஓர் அறிவிப்பு

ஆயிரம் ரூபாய் தமிழ்ப் பரிசு

இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத ஸ்வாமிகளவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தனித்தமிழ் வித்வான் முடிவுப் பரீக்ஷையில் முதன் முறையிலேயே முதல் வகுப்பில் முதல்வராகத் தேறும் ஒருவருக்கு ஆயிரம் (1000) ரூபாய்ப் பரிசை வருஷந்தோறும் சாசுவதமாக அளித்து வருதற்கு ஒரு மூலதனம் இருக்கும் பொருட்டு ரூபாய் நாற்பதினாயிரத்துக்குத் தமது ஆயுளை அமெரிக்கா கண்டத்தில் டாரன்டோ என்னும் நகரத்திலுள்ள "தீ மானுபாக்சரர்ஸ் லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி"யில் இன்ஷ்யூர் செய்து கி. பி. 1943-ஆம் வருஷம் ஆகஸ்டு மீ 1௨ பூர்த்தியாகிற 4,46,416 நெம்பர் பாலிஸியை 1928-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 1-ஆந்தேதியில் எடுத்துக்கொண்டிருப்பதில் நாளது வரையில் பிரீமியம் தொகை ரூபாய் இருபத்தைந்தாயிரத்தெண்பது (25080) செலுத்தப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு 1929-ம் வருஷம் முதல் நாளது வரையில் எழு (7) வித்வான்கள் தேர்ச்சியடைந்து ரூபாய் எழாயிரம் (7000) பரிசு பெற்றிருக்கிறார்கள்.

வடஆர்காடு ஜில்லா திருப்பத்தூர் தாலூக்கா திருப்பத்தூரில் இருக்கும் வித்வான் M. வரதராஜ முதலியார் நாளது வருஷம் அவ்விதம் தேர்ச்சியுற்று ரூபாய் ஆயிரம் (1000) பரிசு பெற்றிருக்கிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

இந்த வித்வான் முடிவுப் பரீக்ஷையில் முதன் முறையிலேயே முதல் வகுப்பில் முதல்வராகத் தேறுபவர்களில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சமமான மார்க்குகள் வாங்குவார்களாயின் அவர்களுடைய பெயர்களைத் தனித்தனியே சீட்டுக்களில் எழுதித் தக்கவர்கள் முன்னிலையில் அவற்றைக் குலுக்கிப் போட்டு எடுப்பதில் தெய்வ சம்மதமாக எவருடைய பெயர் கிடைக்கிறதோ அவரே ஷை பரிசைப் பெறுவதற்கு உரிமையுள்ளவராவர்.

இதனைக் கண்ணுறும் தமிழ் மாணக்கர்கள் இந்தப் பரிசைப் பெறும்படி விசேஷமான முயற்சியுடன் தமிழைப் படிக்கும்பொருட்டு இவ்வாறு தெரிவிக்கலானேன்.

இங்ஙனம்
சுப்பராய பிள்ளை,
சூபர்வைசர்.

426



திரு. பா. மா. முருகமாணிக்கம்

புதிதாயமைத்த காற்பொறி

(Windmill)

௪௪௪-ம் பக்கம் பார்க்க.